

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

2163

தந்த்ரசதுஷ்டயநிபுணரான

ஸ்ரீ. உ. வே. திருமழிசை

கோயில்கந்தாடை

அண்ணா அப்பங்கார்ஸ்வாமி செய்தருளிய

த்ரிம்சத்ப்ரச்நோத்தரம்.



அனேக வித்வான்களைக்கொண்டு பரிசோதித்து

ஸ்ரீ. உ. வே. சோளஸிம்மபுரம்

கொமாண்டூர். ஸ்ரீனிவாஸாசாரியரால்

சென்னை:

ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1891

விலை ரூ. 1-0-0.

அறிவிப்பு.

இந்த புஸ்தகம் சென்னபட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை பாலீசு குருகவாசாரியார் தெருவு 8-வது நெம்பர் கதவிலக்கமுள்ள ...ாளிகையில் கு-அ-அனந்தாசாரியாரிடத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

சோளஸிம்மபுறம் சன்னதி வீதியில் கொமாண்டூர். ஸ்ரீனிவா... சாரியாரிடத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முகவுரை.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனால் மயர்வறமதிநலமருளப்பெற்று, మఖాయాంమకరేమాసే చక్రాంశంభార్గవోద్భవమ్ । మహీసారపురాధీశం భక్తిసారమహంభజే என்று பூர்வாசார்யர்களால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட செழுமாமணிகளிற் றலைவரான திருமழிசைப்பிரான் அவதரித்தருளின திருமழிசை யென்கிற மஹீஸார க்ஷேத்திரத்தில், தந்த்ரசதுஷ்டய நைபுண்ணியசாலியாய், ஸத்ஸம்ப்ரதாய நிர்வஹண துரந்தரராய், ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநத்திற்கு அரும்பதம்முதலான வனேகப்ரபந்த நிர்ம்மாதாவாய், உடையவருடைய விசேஷாபிமாநம் பெற்ற முதலியாண்டானுடைய திருவம்சத்திற்கு ப்ரகாசகராய் எழுந்தருளியிருந்த கோயில் கந்தாடை அண்ணா அப்பங்கார் ஸ்வாமி సత్సంప్రదాయరహస్యబుభుత్సు க்களுக்குத் தத்வஜ்ஞாநார்த்தமாக ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிர்ணய க்ரந்தாநுஸாரமாகவும் ஆப்ததம பூர்வாசார்ய பரம்பராப்ராப்த ஸம்ப்ரதாயாநுஸாரமாகவும் அருளிச்செய்த **த்ரிம்சத்ப்ரச்நோத்தரம். பழநடைவிளக்கம்** என்கிற விரண்டுப்ரபந்தங்களும் ஜீர்ணமாய்ப் போகின்றனவென்று அதிசங்கைபண்ணிய சில ஸ்ரீவைஷ்ணவர்களால் இவைகளை உத்தரிக்கும்படியாய் நியமிக்கப்பட்ட வடியேன் அனேக வித்வான்களைக்கொண்டு பகுக்ரந்தாவலோகநபூர்வகமாகப் பரிசோதிப்பித்து முத்ரணம் செய்வித்தேன். ஸத்ஸம்பரதாயாபிமானிகள் யாவரும் கடாக்ஷித்து இதில்அநவதானத்தால்வந்த பிழைகளைப்பொறுத்து அடியேனை க்ருதார்த்தனுச்செய்யவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

க்ரந்தகர்த்தாவான

அண்ணா அப்பங்கார்ஸ்வாமி

செய்தருளியப்ரபந்தங்கள்.

க. ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாநத்திற்கு அரும்பதம்.

உ. தத்வஸாரவ்யாக்யாநம்.

௩. ஸூக்திஸாதுத்வமாலிகை.

௪. வசஸ்ஸுதாமீமாம்ஸை.

௫. ந்யாயமந்திரம்.

௬. ஸ்ரீதத்வஸுதா.


௭. லக்ஷ்மீமங்களதீபிகை.

இவை முதலானவை இன்னும் ௩௰ க்ரந்தங்களுண்டு



ஹரி: ஓம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



த்ரிம்சத்ப்ரச்நோத்தரம்.

శ్లో ॥ శ్రీశైలేశ దయాపాత్రం ధీభక్త్యాది గుణార్ణవమ్।
యతీంద్ర ప్రవణంవందే రమ్యజామాతరమ్మునిమ్॥......※

ப்ரச்நப்ரகாரங்கள்.

(க) ஆழ்வார்களவதரித்தக்ரமமும் அவர்களவதரித்த வருஷமாஸநக்ஷத்திரங்களும் அவர்கள் செய்தருளின ப்ரபந்தங்களும் அவர்கள் விஷயமான தனியன்களும் அந்தத் தனியன்களை ஸாதித்தவர்கள் திருநாமங்களும் இருக்கும்படி யெங்ஙனே ?

(உ) பெரியபெருமாள் முதற்கொண்டு மணவாளமாமுனிகள்பர்யந்தம் பூர்வாசார்யக்ரமமும்ஸேனைமுதலி யார்க்குப்பிற்பட்டவர்களுடைய வவதார வருஷ மாஸ நக்ஷத்திரங்களு மவர்கள் செய்தருளின கிரந்தங்களும் தத்விஷயத்தனியன்களும் அந்தத் தனியன்கள் செய்தருளினவர்களுடைய திருநாமங்களும் இருக்கும்படி எங்ஙனே ?

(ங) பெரியவாச்சான்பிள்ளை செய்தருளின கிரந்தங்களும் வேதாந்தாசார்யர்செய்தருளின கிரந்தங்களும் அஷ்டாதசார்த்தவிஷயபேதமாகிற வஷ்டாதசஸம்வாதமுண்டென்று சொல்லுகிறார்களே அவ்வளவோ இன்னமுண்டோ ? அது பாஷ்யப்ரமேய ஸ்பர்சியோ அல்லது எத்தைப்பற்றியிருக்கும். அதிருக்கும்படியும், அது இன்னதென்றும், வேதாந்தார்யர் ஸூக்திகளாலே யவற்றிற் சில பேதமில்லையென்று ஸித்தமென்கிறார்களே அது இருக்கும்படியு மெங்ஙனே ?

(ச) வேதாந்தாசாரியருக்குந் தென்னாசாரியர்களுக்கும் அந்யோந்ய காலுஷ்யஹேதுவென் ? அது ஆர்காலையிலேயுண்டாய்த்து ? அவர் ஏதத்வி

ருத்தமாயென்னென்ன க்ரந்தம்பண்ணினார்? ஆசாரிய ஹ்ருதயமவதரித்தத ற்கு ஹேதுவென்? பெருமாள்நாப்பில்பிள்ளையை முனிந்தப்ரகாரமென்? அவர் கோயில்வாஸம் இழந்தபடியென்? அதன்பின்பவர் அனுகூலித்துக் கோயிலுக்கெழுந்தருளிச்செய்தருளின க்ரந்தங்களென்?

(௫) வேதாந்தாசாரியர் பாஷ்யநிர்வாஹம்பண்ணின க்ரமமென்? அதுக் கவர்விஷயமானத் தனியனெது? அதை ஸாதித்தவரார்?

(௬) குருபரம்பரையிலே வேதாந்தாசாரியர் எங்கேயிருந்து பிரிவு? அவருடைய சிஷ்யபரம்பரை யெதுவரை? அவரவதரித்தருளின வர்ஷ மாஸ நக்ஷத்திரங்களென்?

(௭) அவர் சிரி தாசாரபேதங்களங்கீகரித்தாரோ அவை யெவை? அவ் விஷயத்தில் தென்னாசாரியர்களுக் கபிப்ராயமென்?

(௮) வேதாந்தாசாரியருடைய ஸம்பிரதாயஸ்தருக்குத் திருமண்காப் பிலே பேதமுண்டானபடியென்?

(௯) ச்ருதப்ரகாசிகை யாருடையநியமனத்தாலே யாராலே யவதரித்தது?

(௰) ஆராயிரப்படிமுதல் திருவாய்மொழி வியாக்யானங்களுக்குங் கர்த்தாக்களார்?

(௧௧) முப்பத்தாராயிரப்படிக்கு பாஷியகாரருடைய நியமனமில்லை யென்கிறார்களாம் அதிருக்கும்படியென்?

(௧௨) எம்பெருமானார் பாஷ்யஞ்செய்தருளுகிறபோது பேருளாளரா னுவார்த்தை யருளிச்செய்தப்பிரகாரமென்? உடையவர் வடக்கேயெழுந்தருளி வ்ருத்தி க்ரந்தம் ஸங்க்ரஹித்தப்ரகாரமென்? ஸரஸ்வதீபீடத்தில் பாஷ்யத்தை யெழுந்துக்கொண்டப்ரகாரமென்?

(௧௩) உடையவர்செய்தருளின பாஷ்யத்திற்குமுன் விசிஷ்டாத்வைத விஷயபாஷ்யாதிகளுண்டோ?

(௧௪) டங்கத்ரமிடகுஹதேவாதிகளென்கிறவர்களார்? அவர்கள் பாஷியாதிக்ரந்தங்களைச் செய்திருப்பதுண்டோ?

(௧௫) எம்பெருமானார்முதல் பாஷியப்ரவர்த்தகர்களுடைய திருநாமங்களென்ன?

(௧௬) மணவாளமாமுனிகளை யாச்ரயித்த வஷ்டதிக்கஜங்களுடைய திருநாமங்களென்? அவர்களுக்கு மணவாளமாமுனிஸந்நிதியிலே க்ரந்தாந்வயப்ரகாரமென்? அவர்களைக்குறித்து மற்றதுக்கு நியமித்தபடியென்?

(௧௭) வானமாமலை ஜீயர்முதல் இப்போதெழுந்தருளியிருக்கிற ஜீயர்பரி யந்தம் [illegible]

(கஅ) இந்தமடஸ்தரான வானமாமலைஜீயருடைய வம்சஷடிக்களுக்கு டைய திருநாமங்களென் ?

(க௯) ஸ்ரீவண்சடகோபஜீயர் தென்னாசாரியருடைய ஸம்பிரதாயஸ்தராமே அவர்களுடைய திருவடிகளை யாச்ரயித்தவர் ? அதில் எத்தனைபட்டம் தென்னாசாரிய ஸம்ப்ரதாயஸ்தராயிருந்தார்கள் ? அவர்களுடைய திருநாமங்களென் ?

(உ0) அந்தமடத்திலே வடகலையார் பிரவேசித்தபடியென் ? அவர்களெத்தனைப்பட்டமாச்சுது ? அவர்கள் திருநாமங்களென் ? அம்மடத்திலே முன் நடந்தபடியென் ? இப்போதுநடக்கிறபடியென் ? அந்த மடம் ஆர் நியமனத்தாலேயுண்டாச்சுது ?

(உக) ப்ரும்மதந்திரஜீயர்மடமென்றும், பரகாலஜீயர்மடமென்றும் இரண்டுமடமிருக்கிறதே அதெங்கேயிருந்துபிரிவு ? அதார் நியமனத்தாலே யுண்டாச்சுது ? அந்த மடத்வயத்திற்கும் திருமுடியர்க்கக்கிரமமென் ?

(உஉ) ஆதிவண்சடகோப ஜீயர்மடத்தாருக்கும் முனித்ரயத்தாருக்கு மாசாரபேதமுண்டோ ?

(உ௩) தென்னாசாரியர்களிலே யிப்படி தத்வவிஷயத்திலும் ஆசாரவிஷயத்திலும் அந்நோந்ய பேதமுண்டோ ?

(உச) எம்பெருமானார்திருவடிகளிலே யாச்ரயித்த வெழுபத்திநான்கு ஸிம்மாஸநாதிபதிகளுடையதிருநாமங்களென் ? அதிலே சுத்த தென்கலை யெத்தனைபீடம் ? சுத்தவடகலைஎத்தனைபீடம் ? உபயமாய்க்கொண்டு எத்தனை பீட மிருக்கிறார்கள் ?

(உரு) ஸப்தகோத்திரமும் அஷ்டகோத்திரமும் ஆருடைய நியமனத்தாலே நிபந்தனப்பட்டுவருகிறது? அவர்கள் எழுபதுபீடத்திற்குள்ளோ ? புறம்போ ?

(உசா) முப்பத்தாறாயிரப்படி மணவாளமாமுனிகள் பரியந்தம் வந்தக்கிரமமும், அவர் நம்பெருமாளுக்கு ஸாதித்தக்கிரமமும், நம்பெருமாளவர் விஷயத்தில் தனியன் ஸாதித்தக்கிரமமும், அந்தத்தனியனை யெல்லாரும் ஸேவிக்கும்படியான மாகாத்மியமுமிருக்கும்படி யென் ?

(உஎ) வேதாந்தாசாரியர் விஷயமான ராமாநுஜதயாபாத்திரத் தனியன் பரகாலஜீயர் செய்தாரென்றிருக்கிறதே அது அப்படியா ? அல்லது அவர்காலத்திற்கு முன்னேயுண்டா ? அவரெத்தனைவருஷத்திற்குமுன்னே யித்தை யுண்டாக்கினார் ? அத்தை யாருடையபலத்தினாலே யெங்கெங்கே சொல்லிவைத்தார் ? அவருடைய ப்ரயத்தினம் யெங்கெங்கே மடங்கிப்போயிற்று ? அவர் எங்கெங்கே வேதாந்தாசாரியர் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை பண்ணிவைத்தார் ?

(உ.அ) பரகாலஜீயர் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளினவிடத்திலே நடந்த வ்ருத்தாந்தமென்?

(உகூ) தென்கலையாரென்றும் வடகலையாரென்றுந் திருநாமம் வந்ததற்கு ஹேதுவென்? தெங்கலையாரென்பது தமிழ்வேதத்தைப் பிரவர்த்திப்பித்தவர்களென்றும், வடகலையாரென்பது ஸம்ஸ்கிருதவேதத்தைப் பிர்வர்த்திப்பித்தவர்களென்றுங் கொள்ளுமளவிலே அடைவே யொவ்வொத்தற்கு ஒவ்வொன்று இன்றிக்கேயொழிகையாலே யொருவர்க்கு முபயவேதாந்தப் பிரவர்த்தகத்வமில்லையாகப் பிரசங்கிக்குமே யது நிர்வஹிக்கும்படியென்?

(௩௦) திவ்யதேசங்களிலே எம்பெருமான்கள் புரப்பட்டருளும்போது திவ்யப்பிரபந்தானுஸந்தானம் முன்னும் வேதபாராயணம் பின்னும் நடந்து வருகிறதற்கு மூலமென்?

உத்தரப்ரகாரங்கள்.

இப்படி யாழ்வார்களவதாரக்கிரமந்துடங்கி ஸங்கதிவிசேஷத்தாலே இவ்வளவும்வந்து ஆழ்வார்களருளிச்செய்தப்பிரபந்தத்திலே தலைக்கட்டின விந்த முப்பதுப்பிரச்னங்களுக்கும் பூர்வக்கிரந்தங்களைக்கொண்டும் ப்ராமாணிகரான பெரியோர்களிடங்களில் கேழ்விகளைக்கொண்டும் யதாமதி அடவேயுத்தரஞ்சொல்லுகிறதுமேல். அவற்றில் ஆழ்வாராதிகளுடையவவதாராதிக்கிரமப் பிரச்னத்திற்கு உத்தரம். அதில் முதலாழ்வார் மூவரிலே முதலானபொய்கையாழ்வார்பாஞ்சஜந்யாம்சம். அவதாரஸ்தலம் காஞ்சிபுரத்திலேபொய்கையிலே ஹேமாப்ஜம். காலம் த்வாபரயுகத்தில் எட்டிலக்ஷத் தறுபத்தீராயிரத்துத்தொள்ளாயிரத்தெண்பத்திரண்டாவதான ஸித்தார்த்திவருஷத்தில் அற்பசிமீ சுக்லபக்ஷம்அஷ்டமீசெவ்வாய்க்கிழமைகூடின திருவோணநக்ஷத்திரம். இதற்குப்ரமாணம். ఆజ్ఞాద్రిచండనేద్యాపరాఖ్యేసిద్ధార్థ్యాబ్దే ఇష్యవత్సరే మాసి మేషే | శుక్లాష్టమ్యాంభౌమవారే శ్రవణర్క్షే విష్ణుజేన్యుద్ప్రాపకాసారయోగీ॥ இதி. இவர் செய்தருளின ப்ரபந்தம் வையந்தகளியா வென்கிற திருவந்தாதி. இவருக்குத்தனியன். కాంచ్యాం సరసి హేమాబ్జే జాతం కాసారయోగినమ్ | కలయేయశ్శ్రియఃపత్యై రవిం దీపమకల్పయదితి. த்ரமிடத்தனியன் கைதைசேர்பூம்பொழில் இத்யாதி. இவருக்குத் திருநாமங்கள் பொய்கையாழ்வார் (க) ஸரோயோகி (உ) காஸாரயோகி (௩) இத்யாதி. இவைகளில் பிரமாணம்-மார்க்கண்டேயபுராண பார்க்கவபுராண பாத்மபுராணாதிகள். விஸ்தார பயத்தாலே எழுதித்திலோம். (க)

பூதத்தாழ்வார் அவதாரமெங்ஙனே யென்றால் யுகவர்ஷமாஸங்கள் பூர்வோக்தங்களே. நவமிதிதி புதன்கிழமை. அவிட்டநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் திருக்கடல்மல்லையில் மாதவிப்பந்தல். இவர் களமோதகீ யென்கிற பகவத்கதாம்சம். இவரருளிச்செய்த பிரபந்தம் அன்பேதகளியா வித்யாதியான திருவந்தாதி. இவர் தனியன். మల్లాపురవరాధీశం మాధవీకుసుమోద్భవమ్ |

భూతన్నమామి యోవిష్ణోర్జ్ఞానదీపమకల్పయదితి. த்ரமிடத்தனியன். என்பிற விதீரவித்யாதி. இந்தத் தனியன் பிள்ளானருளிச்செய்தது. இதிலும் பூர்வ "க்தமான மார்க்கண்டேய புராணாதிகள்ப்ரமாணம். (உ)

பேயாழ்வார் அவதார மெங்ஙனேயென்றில் யுகவர்ஷமாஸங்களதுவே, திதி தசமீ. வியாழக்கிழமை. சதயநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் திருமயிலையில் கேசவப்பெருமாள் திருக்கிணற்றில் செவ்வல்லிப்பூ. இவர் நந்தகமென்கிற பகவத்கட்காம்சம். இவரருளிச்செய்தப்பிரபந்தம் திருக்கண்டே னென்கிற திருவந்தாதி, இவர்தனியன். దృష్ట్వాஉష్టం తదాహృష్టం రమయాకమలాధిపమ్ । కూపేరక్తోత్పలేజాత మ్మహదాహ్వయమాశ్రయే ఇతి. த்ரமிடத்தனியன். சீராரும்மாடவித்யாதி. இது குருகைக்காவலப்பனருளிச்செய்தது. இவர்க்குத்திருநாமம் பேயாழ்வார். இதிலும் பிரமாணம்பூர்வோக்தம். இவர்மூவரும் அயோநிஜர். (ங)

திருமழிசையாழ்வார் திருவவதார மெங்ஙனேயென்றில் யுகவர்ஷங்களதுவே. தைஷீத்தில் கிருஷ்ணபக்ஷப்பிரதமையில் பானுவாரத்தில் மகாநக்ஷத்திரம் அவதாரகாலம். இவர் ஸுதர்சநாம்சம். இவருக்குப் பிதா ப்ருகுமகாமுனி. இவரவதாரஸ்தலம் வம்சாரண்யமான மஹீஸாரக்ஷேத்ரம். இவர் செய்தருளினப் பிரபந்தம் திருச்சந்தவிருத்தம் (க) நான்முகன்றிருவந்தாதி (உ) இவர் தனியன் మఖాయాంమకరేమాసే చక్రాంశంభార్గవోద్భవమ్ । మహీసారపురాధీశం భక్తిసారమహంభజే ఇతి॥ த்ரமிடத்தனியன். தருச்சந்தப்பொழிறழுவு தாரணியின்றுயர்தீர வித்யாதியும், உலகுமழிசையித்யாதியும். இந்த விரண்டுதனியன்களுந் திருக்கச்சிநம்பி யருளிச்செய்தது. திருவந்தாதித் தனியன். நாராயணன்படைத்தானித்யாதி. இது சீராமப்பிள்ளை யருளிச்செய்தது. இவர் திருநாமம் மழிசைப்பிரான், பக்திஸாரர், பார்க்கவர், அக்ஷபாதர் இதி. இதற்குப் பிரமாணம் భక్తిసారో దేవేశేత్యాదిబ్రహ్మాగ్న్యాత్మనాపరమ్ இத்யந்தமான மார்க்கண்டேயாதி புராணவசனம். இவர் ருஷிஸம்பவர். (ச)

நம்மாழ்வார் திருவவதாரக்கிரம மெங்ஙனே யென்றில் காலம் கலியுகம் நாற்பத்திமூன்றுவது நாளில் வைசாகமாஸத்தில் பகுதான்னிய வருஷத்தில் பௌர்ணமியில் வெள்ளிக்கிழமையில் கர்க்கடலக்னம். திருவவதாரஸ்தலம் திருத்தாம்ரபர்ணீ தீரத்தில் திருக்குருகை. இவர் கௌஸ்துபாம்சம் ; விஷ்வக் ஸேநாம்சம் ; பகவதம்சம். இவர் செய்தருளின பிரபந்தம் திருவிருத்தம். திருவாசரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. இவர்தனியன் మాతాపితేత్యాది. இது ஆளவந்தார் அருளிச்செய்தது. திருவாய்மொழித் தனியன். భక్తామృతమిత్యాది. இது நாதமுனி யருளிச்செய்தது. திருவழுதிநாடென்றும் இத்யாதி. இது ஈச்வரமுனிகளருளிச்செய்தது. மனத்தாலும் வாயாலும் இத்யாதி. இதுசொட்டைநம்பி யருளிச்செய்தது. ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன் இத்யாதி. அநந்தாழ்வானருளிச்செய்தது. வான்றிகழும்

சோலை யித்யாதியும் மிக்கவிறைநிலையு மித்யாதியும் பட்டருளிச்செய்தது. இவர்க்குரிவாஸமான திந்திரிணீவிருக்ஷம்சேஷாம்சம். இவர்திருநாமம். சடகோபன். காரிமாறன். நம்மாழ்வார். வகுளாபரணர். இத்யாதி. இதில் பிரமாணம் క్రూరే కలియుగే ప్రాప్తే నాస్తికైః కలుషీకృతే | విష్ణోరంశాంశసంభూతో వేదవేదాంతతత్త్వవిత్ என்று துடங்கி ప్రయాస్యతి పునస్సోపి సాయుజ్యం పరమాత్మనః॥ இத்யந்தமான பாத்மபுராணவசனமும், శ్రూయతాముచ్యతే కించిద్రహస్యం మునిసత్తమాః । కాలాంతరేషు మచ్ఛయ్యా భూతో భుజగనాయకః నిర్నిద్ర తింత్రిణీతత్త్వమేష్యత్యహమధోక్షజః । నేతుంద్రావిడతాం వేదాన్ సచైవణిజకతాంగతః । మద్భక్తశ్శఠకోపాఖ్యో భవిష్యామి మదిచ్ఛయా॥ இத்யாதியான ப்ரம்மாண்ட புராணவசனமும், కౌస్తుభాదుత్థితం తేజః కించిద్భూమావపాతహి | తద్రూపం భాస్వరం జాతం శఠకోప ఇతి స్మృతమ్ இத்யாதியான மார்க்கண்டேய புராணவசனமும் శఠకోపస్య దేవేశ కథయస్వ కథాం మమ என்று துடங்கி తతః కలియుగస్యాదౌ వైశాఖ్యాం విశ్వభావనః । విష్ణుభక్తిప్రతిష్ఠార్థం సేనేశోవతరిష్యతీత్యాది விஸ்தரேணச்சொல்லிக்கொண்டுபோந்து, తతో గరుడమారోప్య హరిణా నిజమందిరమ్ । శ్రీవైకుంఠమనుప్రాప్య ప్రవేక్ష్యతి నిజాం తనుమ్॥ இத்யந்தமான வ்ருத்த பாத்மவசனமும். இவ்விஷயத்தில் கிரந்தங்களில் வருஷஸங்கியாதி பேதங்கள் தோற்றுகிறவிடத்தில் ராமாவதாராதிகளைப்போலேகல்பபேதேந ஸமாதானங்கண்டுகொள்வது "ஊழிதோறுழியுலகுக்கு நீர்கொண்டு தோழியரும் யாமும்போ" வென்கிற விதிலே யாழ்வார்களுக்குங் கல்பந்தோறும் அவதாரம் உண்டென்பது வ்யஞ்சிதம். இவர் பூவைசியர். (௫)

குலசேகராழ்வார் அவதாரக்கிரமமெங்ஙனேயென்றில் அவதாரகாலம் கலியுகம் பிறந்து இருபத்தெட்டாம்வருஷமான பராபவவருஷத்தில் மாஸிமாதம் வியாழக்கிழமையில் சுக்லத்வாதசியில் புனர்வசுநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் கொல்லிநகர் என்கிறநகரம். இவர் கௌஸ்துபாம்சம். இவர் செய்தருளின பிரபந்தம் பெருமாள்திருமொழி. இவர்தனியன் ఘుష్యతే యస్య నగరే రంగయాత్రా దినే దినే। తమహం శిరసా వందే రాజానం కులశేఖరమ్. த்ரமிடத்தனியன்கள் இன்னமுத மித்யாதியும் ஆரங்கெடவித்யாதியும் மணக்கால்நம்பி யருளிச்செய்தது. இவர் முகுந்தமாலையென்கிற ஸம்ஸ்கிருத ஸ்தோத்திரமு மருளிச்செய்தார். இவர் திருநாமம் கொல்லிகாவலன், கூடல்நாயகன், குலசேகரன் இத்யாதி. இதில் பிரமாணம் కోలపుర్యాం కేరళేషు రాజా కశ్చిద్భవిష్యతి | శృణ్వతో రామచరితం తన్మయీకృతచేతసః॥ இத்யாதியான வ்ருத்தபாத்மவசனம். இவர் க்ஷத்திரியர். (௬)

பெரியாழ்வார் திருவவதாரக்ரமமெங்ஙனேயென்றில் அவதாரகாலம் "தந்வாப்தாபகமே" என்கிறபடியே கலியுகத்தில் நாற்பத்தேழாம் ஸம்வத்ஸரமான க்ரோதனவருஷத்தில் ஆனியில் சுக்லபக்ஷத்தில் ஏகாதசியில் பானுவா

ரத்திில் ஸ்வாதிநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர். இவர் கருடாம்சம். இவர் செய்தருளின ப்ரபந்தம் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி. இவர்தனியன். గురుముఖమనధీత్య ప్రాహ. இது நாதமுனிகளருளிச்செய்தது. மின்னார் தடமதிள்சூழ் இத்யாதி. இது பட்டரருளிச்செய்தது. இவருக்குத் திருநாமம். பெரியாழ்வார், பட்டநாதன், விஷ்ணுசித்தன், வில்லிபுத்தூர்க்கோன், இத்யாதி. இதில் பிரமாணம் ఉపాయోపేయరూపేణ తమేవైకముపాశ్రితః என்றும், ఇతివిజ్ఞాపితో దేవో ధృవస్త్వేవాత్మదర్శనః என்றும், సమస్తవేదసర్వస్వరహస్యం దర్శయిష్యతి என்றும், తదేవ భగవత్తత్వపారమ్యం దర్శయిష్యతి என்றும், శ్రీశోపి గరుడారూఢః இத்யாதியும், ఆశుశ్రీసహాయస్య இத்யாதியும் భట్టనాథపదంలబ్ధః இத்யாதியுமான வ்ருத்தபாத்மவசனம். இவர் புரச்சிகர் (அதாவது முன்குடிமி பிராம்மணர்.) (எ)

தொண்டரடிப்பொடியாழ்வார் அவதாரக்கிரம மெங்ஙனேயென்றில், அவதாரகாலம் கலியுகத்தில் இருநூற்றெண்பத்தொன்பதாவதான ப்ரபவஸம்வத்ஸரத்தில் மார்கழிமாசத்தில் செவ்வாய்க்கிழமையில் கேட்டை நக்ஷத்திரம். அவதாரஸ்தலம் திருமண்டங்குடி. இவர் வனமாலிகாம்சம். இவர் செய்தருளினப்பிரபந்தம் திருப்பள்ளியெழுச்சியும், திருமாலையும். இவர் தனியன் తమేవమత్వా இத்யாதி. த்ரமிடத்தனியன். மண்டங்குடியென்பர் இத்யாதி. இவ்விரண்டு தனியன்களும் திருமாலையாண்டா னருளிச்செய்தது. மற்றொன்றும் வேண்டா இத்யாதி திருவரங்கப்பெருமா ளருளிச்செய்தது. இவர் திருநாமம் தொண்டரடிப்பொடி, விப்ரநாராயணன். இவரும் முன்குடிமிபிராமணர். இதில்ப்ரமாணம் అత్ర త్రైకథయిష్యామి నాజ్ఞాంభావినీంకథామ్ என்றுதுடங்கி భవితామండనగ్రామ ఇత్యాదియుం, శాల్యేత సాధ్యభవత్ప్రీతి భగవత్త్వంబుదేశతే। ప్రాబోధకంభగవతః ప్రబంధంచారయిష్యతి இத்யாதியும், వినియుజ్యశిరాంతే పరంవ్యోమప్రపద్యతే இத்யாதியுமான வ்ருத்தபாத்மாதிவசனம். (அ)

திருப்பாணாழ்வார் திருவவதாரக்ரம மெங்ஙனே யென்றில் அவதாரகாலம் கலியுகத்தில் முன்னூற்றுநாற்பத்திரண்டிற்குமேற் செல்லாநின்றுள்ள துர்மதிவருஷத்தில் வ்ருச்சிகமாஸத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் த்விதீயைதிதியில் புதன்கிழமையில் ரோகணிநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் நிசுளாபுரியென்கிற உறையூர். இவர் ஸ்ரீவத்ஸாம்சம். இவரருளிச்செய்தப் பிரபந்தம் அமலனாதிப்பிரான். இவர்விஷயமான தனியன் ఆపాదచూడమనుభూయహరిమిత్యాది. இது பெரியநம்பி யருளிச்செய்தது. த்ரமிடத்தனியன்.

காட்டவே கண்ட பாதங் கமலநல் லாடை யுந்தி
தேட்டருமுதிர பந்தந் திருமார்பு கணடஞ் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனிமுனியேறித் தனிபுகுந்து
பாட்டினாற் கண்டு வாழும் பாணர்தாட் பரவி னோமே.

இது திருமலைநம்பியருளிச்செய்தது. இவருக்குத் திருநாமம் திருப்பாணாழ்வார், முனிவாகனர், இவர் அயோநிஜர். இதில் பிரமாணம். కార్తికేమాసి రోహిణ్యాం గాయకః ప్రభవిష్యతి. என்று துடங்கி விஸ்தரேணச்சொல்லிக்கொண்டு போந்து ఆపాదచూడం సేవిత్వా లయం రంగిణి యాస్యతి॥ என்று மளவாகச்சொன்ன வ்ருத்தபாத்மபுராணாதி வசனம். (௯)

திருமங்கையாழ்வார் திருவவதாரக்கிரம மெங்ஙனேயென்றில் அவதாரகாலம் கலியுகம் முன்னூற்றுத்தொண்ணூத்தேழுக்குமேல் செல்லாநின்றுள்ள நளவர்ஷத்தில் விருச்சிகமாசம் வியாழக்கிழமையில் கிருத்திகாநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் திருவாலிதிருநகரியில் திருக்குறையலூர். இவர் சார்ங்காம்சம். இவர்செய்தருளினப் பிரபந்தங்கள் பெரியதிருமொழி. திருவெழுகூற்றிருக்கை. சிறுத்திருமடல், பெரியதிருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம். ஆக ஆறுப்பிரபந்தங்கள். இவர்தனியன் కలయామీత్యాది॥ இதுதிருக்கோட்டியூர்நம்பி யருளிச்செய்தது. திரமிடத்தனியன் வாழிபரகாலனித்யாதி. இது உடையவர் அருளிச்செய்தது. நெஞ்சுக்கிருள்கடி யித்யாதி. ஆழ்வானருளிச்செய்தது. எங்கள்கதியே எம்பார் அருளிச்செய்தது. இவர் திருநாமம்பரகாலன். நீலன். கலிகன்றி. அருண்மாரி. ஆடன்மாவலவன். திருமங்கையாழ்வார். இத்யாதி. இவர்கள்ளக்குடி. இவர் சீர்காழியிலேயிருக்கிற சம்மந்தனை வாதத்திலே ஜயித்து அவன்கையில்வண்டயத்தைத்தமக்கு வீரக்கழலாகப்பெற்றவர். இவர்கோயில்முதலான திவ்யதேசங்களிலேப்ராகாரகோபுர மண்டபாத்யனேக கைங்கரியஞ் செய்தவர். இவர், கலியனருளப்பாட்டிலேசொல்லுகிறபடியே திருவத்யயனோத்ஸவத்தில் நம்மாழ்வாரை யெழுந்தருளப்பண்ணிவைத்து அவர் திருவடித்தொழும் ப்ரகாரத்தைப் பெரியபெருமா ளனுபவித்துக்காட்டக்கண் டனுபவித்தார். இவர் ஜன்மாந்தரத்திலே உபரிசரவசு என்கிற ராஜா. இவரவதாரத்தின் பிரமாணம் అత్రాపివర్తయిష్యామిభావ్యం భగవతీం కథామ్। శ్రీపాలనాక్ష్య విషయే చోళేషు ప్రభవిష్యతి। వర్షే చతుర్థే కార్తిక్యాం నీలవర్ణాంశుప్రియః॥ என்று விஸ்தரேணசொல்லிக்கொண்டுபோந்து ఇతి శ్రీశైలశిత త్వ_దౌ నిజనామోపదేక్ష్యతి॥ இத்யாதியாகச் சொன்ன வ்ருத்தபாத்மாதி வசனம். (௧௦)

இப்படி ஆழ்வார்கள் பதிவரோடொக்க అహం శిష్యా చ దాసీ చ భక్తా చ என்கிற பூமிப்பிராட்டிவசனத்தின்படியே ஸ்ரீ வராகபுராண ச்ரவணத்தால் சிஷ்யையாய் ஆழ்வார்களோ டொக்கப் பிறந்து கவிபாடினமையாலே பக்தையாய் பரதசையி லெம்பெருமானும் பெரிய பிராட்டியாருமான சேற்றியிலே கலசப்பானையெடுப்பாரோபாதி தாஸியுமாயிருக்கையாலே பூம்யம்சமான ஆண்டா ளவதாரத்தையும் வ்ருத்தபாத்மாதி பரமர்ஷிப் பிரணீதபுராணங்களிலுந் திவ்யஸூரிசரிதாதி பூர்வாசாரியக் கிரந்தங்களிலும் பிரதிபாதித்துப் போருவதுண்டு. ஆகையால் ஆண்டாளவதாரக்ரமஞ் சொல்லக்கடவது. அதெங்ஙனேயென்றில் திருவவதாரங்கலியுகத்தில் தொண்ணூற்றேழிற்குமேற் சொ

ல்லாநின்றுள்ள நளவருஷம் ஆடிமாசத்தில் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தியில் செவ்வாய்க்கிழமைகூடின பூர்வபல்குனீநக்ஷத்திரம். ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதாரஸ்தலம் துளஸீவநம். இவர்பூமிப்பிராட்டியாரம்சம். இவள் அயோநிஜையானாலும் பெரியாழ்வார்ஸம்பந்தத்தினால்ப்ராம்மணவர்ணம். இவர்செய்தருளினப்ரபந்தம் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும். இவள்தனியன் నీళాతుంగేత్యాది. இது பட்டரருளிச்செய்தது. த்ரமிடத்தனியன். அன்னவயலித்யாதி. இது உய்யக்கொண்டா ரருளிச்செய்தது. அல்லிநாட்டாமரைமேலித்யாதி. இது திருக்கண்ணமங்கையாண்டா னருளிச்செய்தது. இவள் திருநாமம் சூடிக்கொடுத்தாள், ஆண்டாள், ஆழ்வார் திருமகள், கோதையித்யாதி. கோதை யென்று மயிர்முடிக்கும் பூமாலைக்கும் பூமாலை தொடுப்பவர்களுக்கும் பெயராகையாலே யிவள் பூமாலைபோன்றவளாகையாலும் பூமாலை தொடுக்கும் ஆழ்வார்மகளாகையாலும் இவளைக்கோதை யென்கிறது. கோதையென்று திருக்குழலாய் அத்தைத் திருமாலையோடே யெம்பெருமானுக்குக் கொடுத்தவளாகையாலே గాందదాతిగోదా என்கிற வடமொழி, த்ரமிடத்தில் கோதையென்று திரிந்துகிடக்கிறது. இவளவதாரத்தில் ப்ரமாணம் “అయోనిజా తుతశ్ సీతానేవిశ్వధారిణీ| దుహితావిష్ణుచిత్తస్యజానకీవజనిష్యతి என்று துடங்கி కథంగోదావతరణం இத்யாதியால் ஸூத்திரவதிப்ரச்னத்தையுபக்ஷேபித்து ஸ்ரீவிஷ்ணுசித்தமாகாத்ம்யகதந பூர்வகமாக ఆషాఢేపూర్వఫల్గున్యాం என்று துடங்கி తులసీమూలభూభాగే బాలాముత్తానశాయినీమ్ । పద్మాస్యాంపద్మనయనాంపద్మనాభమనఃప్రియామ్॥ ద్రక్ష్యత్యక్షీణవిభవాం సీతాంసీరధ్వజోయథా,, இத்யாதியாலும்; “భగవద్భక్తిపీయూషస్తవైస్తుతివచఃక్రమైః,, இத்யாதியாலும்; క్రమేణపంచవర్షాణ్యా విష్ణవేపరికల్పితా। పిత్రాగోవిందగానేనదివ్యప్రకృతిశాలినీ। కృష్ణంసంకల్ప్య రమణంప్రబంధకృతవాఙ్మయైః | దివ్యప్రబంధకరణాత్ స్తోష్యతి శ్రీసఖంహరిమ్| తదామనోహరాంమాలాంఆసజ్యశిఖభారేస్వే। యన్మాల్యస్రజంవిష్ణుస్స్వయంశేఖరయిష్యతి,, என்றுமளவாக ஸ்ரீதேவீவசனமாக ப்ரவ்ருத்தவ்ருத்தபாத்மாதி வசனங்கள். (௧௧)

நம்மாழ்வாருக்குத் திருவடியாகையாலே மதுரகவியாழ்வார் திருவவதாரக்கிரமமும் இவற்றோடொக்கச் சொல்லுவதுண்டு. அதெங்ஙனேயென்னில் அவதாரகாலம் த்வாபரயுகத்தில் எட்டுலக்ஷத்து மூவாயிரத் தெண்ணூற்றிருமுபத்தெட்டுக்குமேற் செல்லாநின்றுள்ள ஈச்வரவருஷத்தில் சித்திரைமாஸம் சுக்லபக்ஷத்தில் வெள்ளிக்கிழமை சித்திரைநக்ஷத்திரம். அவதாரஸ்தலம் பாண்டியதேசத்தில் திருக்கோளூரென்கிற திருப்பதி. இவர் குமுதாம்சமும் கருடாம்சமும். இவர் செய்தருளின ப்ரபந்தம் கண்ணிநுண்சிறுத்தாம்பு. இவர் தனியன் అవిదితవిషయాంతరః இத்யாதியும் வேறொன்று நானறியேன் இத்யாதியும். இது நாதமுனிக ளருளிச்செய்தது. இவர் పూర్వశిఖాబ్రాహ్మణ

வர்ணம். இவர்திருநாமம் மதுரகவிகள், శఠారిభక్తర్, శఠారివాగ్వ్యాసర్, இத்யாதி. இவரதவதாரத்தில் ப்ரமாணம்:— తామ్రపర్ణీనదీతీరే కోలగ్రామే ద్విజన్మనాం। కులే మధురకవ్యాఖ్యశ్చక్రాంశః ప్రాదుర్భవిష్యతి। హరివాహాంశసంభూతశ్శఠకోపపదాశ్రయః என்று துடங்கி ఆచార్యచరణేక్షణః। గురుమేకాన్తమాశ్రితః। స్వకర్మజ్ఞానభజనప్రపత్తిష్వనధిక్రియామ్। అశక్త్యాఖ్యాపయన్నౄణాం పశ్చాత్యాచార్యసమ్మతౌ। సదాచార్యోపసంయుక్తస్వమాహాత్మ్యపరాంగతిమ్ இத்யாதி யானபாத்மபுராண வசனம். உடையவர் திருவவதாரக்கிரமம் குருபரம்பராக்ரமத்திலே சொல்லக்கடவது. (௧௨)

ఇతి త్రింశత్ప్రశ్నాఖ్యం ప్రథమప్రశ్నోత్తరం.

ஆழ்வார்களு மாசார்யர்களுமென்று ஆழ்வார்களுக் கனந்தரமாசார்யர்களாகையாலே ஆழ்வார்களுக் கநந்தரம் குருபரம்பரா விஷயமான த்விதீயப்ரச்னத் திற்குத்தரம். குருபரம்பராக்ரம மிருக்கும்படியெங்ஙனேயென்றில் எம்பெருமான்.பெரியபிராட்டியார்,ஸேனைமுதலியார்,நம்மாழ்வார்,நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, உடையவர், எம்பார்,பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை,வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள், இது ப்ரசுரமான வாச்ரயணஸம்ப்ரதாய பரம்பரை. இதில் எம்பார் ஸ்தானே ஆழ்வானையநுஸந்திப்பதுமுண்டு. இன்னு முடையவர் துடங்கி ஆழ்வான், ஆண்டான், கிடாம்பியாச்சான், ஆதுரிபெம்மான், நடாதூராழ்வான் முதலானாருடைய தத்தத்வம்சக்ரமத்தில் ஆச்ரயண ஸம்ப்ரதாய பரம்பரைகள் பலவுமுண்டு. குருபரம்பரைதான் ஆச்ரயணபரம்பரையும் க்ரந்தபரம்பரையுமாக விரண்டுவகைப்பட்டிருக்கும். அதில் க்ரந்தபரம்பரை ஸ்ரீபாஷ்யாதிபரம்பரையும், திவ்யப்ரபந்த வியாக்யானபரம்பரையும், ரஹஸ்ய க்ரந்த பரம்பரையுமாக மூன்றுவகைப்பட்டிருக்கும். அது மேலே வ்யக்தமாம். ப்ரதமாசார்யன் எம்பெருமான் திருநக்ஷத்திரம் திருவோணம். அநந்தரம் பெரியபிராட்டியார். இவள் த்வயம்முதலான ரஹஸ்யங்களை யெம்பெருமான்பக்கல் பெற்றிருக்கும். திருநக்ஷத்திரம் உத்தரபல்குனி. பெரியபிராட்டியார் பக்கல் ஸகலரஹஸ்யங்களையும் பெறுகையாலே தநனந்தரம் ஸேனைமுதலியார். இவர் திருநக்ஷத்திரம் அற்பசியில் பூராடம். இவர்கள் மூவரும் நித்யராகுலும் ஓரோதசாபேதங்களைப் பற்ற யுபதேசக்ரமமும் திருநக்ஷத்ரமுமுண்டு. நம்மாழ்வார் திருவவதாரக்ரம முன்பு சொல்லிற்று. இனி நாதமுனிகள்முதல் திருவவதாராதிகள் சொல்லுகிறது. எங்ஙனேயென்றில்-அவதாரகாலம் ஆனிமாதத்தில் அனுராதா நக்ஷத்ரம். அவதாரஸ்தலம் வீரநாராயணபுரம். இவர் பிராம்மணவர்ணம். இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் ஸ்ரீபுருஷநிர்ணயமும், ந்யாயதத்வமும். இவருடைய வவதாரமும் తతః కాలేన మహతా వినష్టం భువి తత్ప్రభుమ్। నాథనామా మునివరో యోగజ్ఞానాదవాప్స్యతి. என்று வ்ருத்தபாத்மத்திற் சொல்லப்பட்ட

ரு. அநந்தரம் இவருடைய திருவடிகளை யாச்ரயித்தவர் உய்யக்கொண்டார். இவர் திருநக்ஷத்ரம் சித்திரையில் க்ருத்திகா நக்ஷத்திரம். இவர் தனியன். నమః పంకజనేత్రాయేత్యాది. இது மணக்கால்நம்பி யருளிச்செய்தது. இவருக்குத் திருநாமம் உய்யக்கொண்டார், புண்டரீகாக்ஷரென்று. அநந்தரம் இவருடைய திருவடிகளை யாச்ரயித்தார்மணக்கால்நம்பி. இவர்ஆளவந்தாருக்கு ஸகலார்த்தமும்ப்ரஸாதித்தார். இவர் திருநக்ஷத்திரம் மாசிமாஸம்மகம்.இவர்திருநாமம் ஸ்ரீராமமிச்ரர். இவர்தனியன் అయత్నతో యామునమిత్యాది. இது பெரியநம்பி யருளிச்செய்தது. அநந்தரமிவருடைய திருவடிகளிலே யாச்ரயித்தவர் ஆளவந்தார். இவர் அவதாரகாலம் ஆடிமாஸம் உத்திராடம். அவதாரஸ்தலம் வீரநாராயணபுரம். இவர் ஸிம்மாஸனம்சம். இவர் திருநாமம் ஆளவந்தார், யமுனைத்துறைவர், யாமுனாசார்யர், யாமுநேயர் என்று. இவர்செய்தருளின ப்ரபந்தம் ஆத்மஸித்தி. ஸம்வித்ஸித்தி. மோக்ஷஸித்தி. ஆகமப்ராமாண்யம். கீதார்த்தஸங்க்ரஹம். ஸ்தோத்ரரத்னம். சதுச்லோகி. மாயாவாதகண்டனம். இவர்தனியன் యత్పదాంభోరుహేత్యాది. இது உடையவருளிச்செய்தது. இவர் சொட்டைக்குலம். அநந்தரம் இவர் திருவடிகளை யாச்ரயித்தவர் பெரியநம்பி. இவர் அவதாரகாலம் மார்கழியிற்கேட்டை. இவர் திருநாமம் பெரியநம்பி. மஹாபூர்ணர். இவர்தனியன் కమలాపతీత్యాది. இது உடையவரருளிச்செய்தது. இவர் திருவடிகளை யாச்ரயித்தவ ருடையவர்.இவருடைய திருவவதாரம் கலியுகத்தில் நாலாயிரத்து நாநூற்றுப் பதினெட்டிற்குமேற் செல்லாநின்றுள்ள பிங்களவர்ஷத்தில் சித்திரைமாசத்தில் ஸப்தமீ குருவாரங் கூடினதிருவாதிரை நக்ஷத்திரம். அவதாரஸ்தலம்ஸ்ரீபெரும்பூதூர். இவர் எம்பெருமான் பெரியபிராட்டியார் திருவநந்தாழ்வான் ஸேனைமுதலியார் பஞ்சாயுதங்கள் இவர்களுடைய வம்சாவதாரம். இவருக்குத் திருநாமம் இளையாழ்வார். இராமானுஜன் இத்யாதி. இவர் செய்தருளின ப்ரபந்தங்கள் ஸ்ரீபாஷ்யஸாரஸங்க்ரகதீபங்கள் மூன்றும், கத்யங்கள் மூன்றும், கீதாபாஷ்யம், நித்யம், ஆக ஒன்பது. இவர் ஹரிதகுலதிலகர். இவருடைய வைபவம் எழுதப்புக்கால் ஒரு மகாபாரதத்திற்குப் போருமாகையாலே எழுதித்திலோம். இவர் தனியன் యోనిత్యమచ్యుతేత్యాది. இதுஆழ்வானருளிச்செய்தது. முன்னைவினையகல, நயந்தரும், மணிமுத்தனூர். சொல்லுந்தொகைஅமுதனூர். இவரவதாரத்திற் ப்ரமாணம் తతః కాలేబహుతిథే వినష్టేం విష్ణువర్త్మనీమ్ । త్రిదండమండితో దేవో దేశః ప్రావర్తయిష్యతి. పాషండబహులే లోకే కుదృష్టిజనసంకులే । మోహవ్యామూఢే జగతి వినష్టే హరిసైభవే। మోహనైరానుసైశ్చాన్యైః కుయుక్తిపరికల్పితైః। వేదాన్తమార్గానుగతైరనైన్యైః కుమతిసుందరైః। సిద్ధాంతైర్విస్మృతం లోకం పునరప్యుద్ధరిష్యతి । బాదరాయణసంజ్ఞస్య విశ్రుతస్య మహామునేః। మతం వేదాంతతాత్పర్యం విస్మృతం ప్రేక్ష్య భూతలే। గీతాచార్యమతంచైవ పునరుద్ధారయిష్యతి । త్రిదండధారీభగవాన్ పునరుద్ధారయిష్యతి । త్రిదండపాణిర్భగవాన్ వేత్రపా

ఽస్తవప్రియః | భక్తానాంభాగధేయేన భువిప్రాదుర్భవిష్యతి. இத்யாதியும், ఇత్యేవంవిప్లవందృష్ట్వాభక్తాన్భావయితుంహరిః | బాదరాయణసంజ్ఞస్స్యమునేర్దర్శయితుమ్మతమ్ | శారీరకమ్మహాభాష్యం సూరిణా కారయిష్యతి|இத்யாதியுமான வ்ருத்தபாத்ம வசனமும் అనంతఃప్రథమంరూపం లక్ష్మణశ్చతతఃపరమ్ | బలభద్రస్తృతీయస్తుకలౌకశ్చిద్భవిష్యతి. என்கிற யாதவாசல மஹாத்ம்ய வசனமும் பார்க்கவபுராணாதிகளுமென்று கண்டுகொள்ளுவது.

இவர் திருவடியி லார்ச்ரயித்தவர் எம்பார். இவர் அவதாரகாலம் க்ரோதன வருஷம் தைமாசம் பௌர்ணமி சோமவாரம்கூடின புனர்வஸு நக்ஷத்திரம். இவரவதாரஸ்தலம் மழலைமங்கலம். இவர் வட்டமணிக்குலம். இவருக்குத் திருநாமம் எம்பார், இராமாநுஜபதச்சாயை, கோவிந்தாஹ்வயர், இதி. இவர் விஷிதவிஷய விரக்தர். இவர் திருவடிகளிலே யாச்ரயித்தவர் பட்டர். இவரவதார திருநக்ஷத்திரம் வைகாசிமாசம் அநூரதம். அவதாரஸ்தலம் திருவரங்கம் பெரியகோயில். இவர் ஹாரீதகோத்ரோத்பவர். இவர் ஸ்ரீரங்கநாதப்ரஸாதலப்தர், இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் தத்வரத்நாகரம், ஸஹஸ்ரநாம பாஷ்யம். அஷ்டச்லோகி. ப்ரணவவிவரணம். ஸ்ரீகுணரத்நகோசம்,ஸ்ரீரங்கராஜஸ்தவம். க்ரியாதீபம். லக்ஷ்மீகல்யாணம் இத்யாதி. இவர் ச்ரிங்கேரி மடத்தில் ஸ்ரீவேதாந்தியென்று ப்ரஸித்தரான மாதவோபாத்யாயனை வாதத்திலே ஜயித்துத்திருவடிகளிலே யாச்ரியிப்பித்துக்கொண்டு நஞ்சியரென்னும்படி தர்சனோபகாரகராக்கினர். இவர் திருநாமம்-பட்டர்,பெரியபட்டர், ஸ்ரீபராசரபட்டர். ஸ்ரீரங்கநாதபட்டர், வேதாந்தாசார்யர், வேதாந்தியைவெல்லும் விரகர். இவர் வைபவம் எழுதிமுடியாது. இவர் தனியன் " శ్రీపరాశరభట్టార్యేత్యాది" இது நஞ்சியரருளிச்செய்தது. இவர்திருவடிகளிலே யாச்ரயித்தவர் நஞ்சீயர். இவருடைய வவதாரகாலம் பங்குனிமாஸம் உத்திரம். அவதாரதேசம் மேல்நாடு. இவரருளிச்செய்தப்ரபந்தங்கள்:-திருவாய்மொழிக்குஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம். திருப்பாவைக்கு ஸ்வாபதேசவ்யாக்யானம். கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம் శ్రీసూక్తభాష్యం. இத்யாதி. இவர் திருநாமம்-வேதாந்தவேத்யர். நஞ்சீயர் இத்யாதி. இவர் திருநாமம் నమో వేదాంత వేద్యాయేత్యాది, இது நம்பிள்ளையருளிச்செய்தது. இவர் திருவடிகளிலே யாச்ரயித்தவர் நம்பிள்ளை. இவர் அவதாரகாலம் கார்த்திகைமாஸம். க்ருத்திகாநக்ஷத்திரம். அவதாரதேசம் நம்பூரென்கிற கிராமம். இவர்திருநாமம் :—நம்பூர்வரதராஜன், நம்பிள்ளை, திருக்கலிகன்றிதாஸன், கலிவைரிதாஸபாதர்,இத்யாதி. இவர் செய்தருளின ப்ரபந்தங்கள்-நம்பிள்ளை ரஹஸ்யம். திருவிருத்தஸ்வாபதேசவ்யாக்யானம். இவர் துன்றுபுகழ்கந்தாடை தோழப்பராலேயுலகாரியனென்றுதிருநாமம் சாற்றப்பட்டிருப்பவர். இவர் தனியன் వేదాంతవేద్యామృతేత్యాది. இது பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்தது. இவர் திருவடிகளிலேயாச்ரயித்தவர்வடக்குத்திருவீதிப்பிள்ளை. இவரவதாரகாலம் ஜ்யேஷ்டமாஸம் ஸ்வாதிநக்ஷத்

திரம். இவரவதாரஸ்தலம்.கோயில்இவரருளிச்செய்தப்பிரபந்தம்-அஷ்டாக்ஷரதீபிகை. கத்யத்ரயத்திற் கொருவ்யாக்யானம்,திருவாய்மொழிக்குமுப்பத்தாராயிரப்படிவ்யாக்யானம், இத்யாதி. இவர்திருநாமம்வடக்குத்திருவீதிப்பிள்ளை. ஸ்ரீக்ருஷ்ணபாதர். இவர்முடும்பைக்குலம். ஸ்ரீவத்ஸகோத்ரம். இவர்தனியன் శ్రీకృష్ణపాదపాదాబ్జే. இத்யாதி. இதுலோகாசார்யரருளிச்செய்தது.

இவருக்குக்குமாரராய் இவர்திருவடிகளிலேயாச்ரியித்தவர்பிள்ளைலோகாசார்யர். இவர்திருநக்ஷத்திரம் அற்பிசியில் திருவோணம்.இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள்-அஷ்டாதசரஹஸ்யங்களும், மற்றும்ரஹஸ்யங்களும். இவர்தனியன் లోకాచార్యాయగురవేత్యాది. இவர் பன்னீராயிரந்திருமுடிக்காய் திருத்தினமஹாவிப்லவத்திலே நம்பெருமாளுக்குத் திருமேனிக்காவலாய், காடும்மலையுந் துடர்ந்து நோக்கினர். இவர்திருவடிகளிலே யாச்ரயித்தவர் திருவாய்மொழிப்பிள்ளை. இவரவதாரஸ்தலம் குந்திநகரம். இவருக்குத்திருநாமம் திருவாய் மொழிப்பிள்ளை. திருமலையாழ்வார். ஸ்ரீசைலேசர். சடகோபதாஸர். இவர்திருமலையிற் காடுவெட்டி நாடாக்கி ராமானுஜசதுர்வேதிமங்கலங்கட்டிவைத்து ராமானுஜனுக்குத் தனிக்கோயில் கட்டிவைத்து, ஆழ்வார்ஸன்னிதிக்கு ஜீர்ணோத்தாரணம் பண்ணிவைத்து, ஆழ்வாரையுமெழுந்தருளப் பண்ணிவைத்தார். இவர்செய்தருளினப்ரபந்தம் பெரியாழ்வார் திருமொழிக்கு ஒருவ்க்யாயானமும் ஸ்ரீவசனபூஷணத்திற்கொருவ்யாக்கியானமும் வ்யாப்த்யநுஸந்தானமென்கிற க்ரந்தமும். இவர்தனியன் నమశ్శ్రీశైలనాథాయేత్యాది. இது மணவாளமாமுனிகளருளிச்செய்தது.

இவருடைய திருவடிகளிலே யாச்ரயித்தவர் மணவாளமாமுனிகள். இவருடையவவதாரகாலம் கலியுகத்தில் நாலாயிரத்துநாற்றெழுபத்தொன்றுக்குமேல் செல்லாநின்றுள்ள ஸாதாரணவருஷம்அற்பிசிமாஸம் சுக்லபக்ஷத்தில் மூலநக்ஷத்திரம். அவதாரஸ்தலம்-திருநகரி. இவர்திருநாமம்-மணவாளமாமுனி, சடகோபஜீயர், யதீந்திரப்ரவணர், ரம்யஜாமாதேத்யாதி. இவர்தனியன் ஸ்ரீசைலேசேத்யாதி ப்ரஸித்தம். இதுபெரியபெருமாளருளிச்செய்தது.இவ்வர்த்தம்மேலேஸ்புடமாம்.

இவர்செய்தருளிய ப்ரபந்தங்கள்-ஸ்ரீவசனபூஷணவ்யாக்யானமும்,ஆர்த்தியும்,உபதேசரத்னமாலையும், திருவாய்மொழி நூற்றந்தாதியும்,யதிராஜவிம்சதியும்,முமுக்ஷுப்படிவ்யாக்யானமும்,தத்வத்ரயத்திற்குவ்யாக்யானமும், திருவாராதனக்கிரமமும், கீதாதாத்பர்யதீபமும்,பெரியாழ்வார்திருமொழிக்கு வ்யாக்யானமும்.நூற்றந்தாதியுரையும், முப்பத்தாறாயிரப்படிக்குப்ரமாணத்திரட்டும்,ஞாநஸாரவ்யாக்யானமும், ப்ரமேயஸார வ்யாக்யானமும், ஸப்தகாதாவ்யாக்யானமும். இன்னுமுண்டாகிற் கண்டுகொள்வது. இவர்திருவடிகளிலே அஷ்டதிக்கஜங்களாச்ரயித்தார்கள். இவர்நியமனத்தினாலே ஸப்தகோத்ரவ்யவஸ்தைநடந்துவருகிறது. இதின்விஸ்தரம் ஸ்வாவஸரத்திலேயாகிறது. இவர்சேஷாம்சம். இவ்வர்த்தத்தில் శేషశ్శ్రీమానజనిసపునస్సౌమ్యజామాతృయోగీభోగీం

ద్రోయ స్తదనుమహితో రాఘవస్యానుజో భూత్ | భూత్వా భూయో వరవరముని
భూ ఽయసాభా సమాసేరక్షత్యస్మా రఘుకులపతే రాశ్రితో భద్రపీఠమ్. என்றுத
மக்குத் திருவாராதனமான சக்ரவர்த்திதிருமகனுடைய கோவிலாழ்வாரிலே
யெழுந்தருளியிருக்கிற திருவநந்தாழ்வான் முன்புமணவாளமாமுனிகளாய்,
பின்புமாறி இளையபெருமாளாய், பின்னையுமதுமாறி மணவாளமாமுனிகளாக
பரமப்ராமாணிகரான வெரும் பியப்பாவுக்கு ஸாக்ஷாத்கரிப்பித்த ப்ரத்யக்ஷ
ப்ரமாணமும், ஒருஸாத்விக வ்ருத்தை பலகணியில் யோகவேளையில் திருவந
ந்தாழ்வானாக வெழுந்தருளியிருந்தமையை ப்ரத்யக்ஷித்தாளாகையாலே யந்த
ப்ரத்யக்ஷப்ரமாணமும், నిత్యం పత్యుః పరిచరణతో వణ్ణతో నిర్మలత్వాత్ వృత్త్యా
వాచాం విబుధ సరితశ్చాతురీముద్గిరంత్యా! శేషశ్శ్రీమానితి రఘుపతే స్తల్పరేణాపివాణీం
என்கிற வநுமான ப்ரமாணமும், உத்தமநம்பியைக்குறித்துபெரியபெருமாள்
திருவநந்தாழ்வானைத்தொட்டுக்காட்டி நம்மணவாளமாமுனிவனாநந்திருவன
ந்தாழ்வானாக வறியுமென்று ப்ரதமாப்தனுகையாலே யவரருளிச்செய்த ஆப்
தவாக்யமான சப்தப்ரமாணமுமாகிற ப்ரத்யக்ஷானுமானசப்தங்கள் மூன்றும்
ப்ரமாணமென்று கண்டுகொள்வது. இவற்றுக்கஸித்தி சங்கிக்கில் தூப்பல்
பிள்ளையினுடைய கண்டாவதாரத்தில் ப்ரமாணமான உபபத்யாதிகளுக்கு
மஸித்திசங்கிக்க ப்ரஸங்கிக்கும். அதற்கு பாதக (బాధక) ப்ரமாணமில்லையா
கையலே ஐதிஹ்யத்தாலு முபபத்தியாலும் ஸித்திக்குமென்றில் அதுப்ரக்ருத
த்திலும் துல்யம். அதுபுராணஸித்த மென்றில் அந்தபுராணம் ச்ரத்தாஜாட்ய
கல்பிதமென்று மிடம் தத்ப்ரதிபாத்யரரான தூப்பிற்பிள்ளையினுடைய ஸூக்
தியாலே ஸித்தம். இதுவும்மேலேவ்யக்தமாம்.ஆகையாலே யபாதித(అబాధిత)
ங்களான வைதிஹ்யத்தாலும் உபபத்திகளாலும் தத்ததவதாரங்களைக் கொ
ள்ளவேணும். నాదేవాంశో దదాత్యన్నం. இத்யாதிகளுமுண்டிறே. இவர் கோயி
லிலே ஸகலவிதகைங்கர்யமுஞ்செய்தருளி திருநகரியிலே ஆழ்வார் ஸன்னிதி
யிலே அழகியமணவாளன் திருமண்டபம்முதலான வனேககைங்கரியங்களுஞ்
செய்தருளினர். இதனுடைய விஸ்தரம் பகுக்ரந்தங்களிலே கண்டுகொள்ளு
வது. இது ப்ரசுரமான வாச்ரயணகுருபரம்பரை. இன்னமும் நம்பிள்ளை,பெரிய
வாச்சான்பிள்ளை, வாதிகேஸரியழகிய மணவாள ஜீயர்,வாதிகண்டீரவர்,இத்யா
தியாக வெகுபரம்பரையுமுண்டு. அதிலேபெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்
தது பெரியாழ்வார்திருமொழிமுதல் நூற்றந்தாதியளவான வங்கோபாங்கபா
வேநவர்த்திக்கிற விருபத்திநாலுதிவ்ய ப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யானங்க
ளும், பரந்தரஹஸ்யம் மாணிக்கமாலை முதலான ரஹஸ்யக்ரந்தங்களும், ஸ்ரீரா
மாயணாதிகளிலே சிலதனிச்லோகங்களுக்கு வ்யாக்யாநங்களும், அபயப்ரதா
நவ்யாக்யாநமும்,வராஹசரமச் லோகவ்யாக்யாநமும்,ஸ்தோத்ரரத்நசதுச்லோ
கீகத்யத்ரயங்களுக்கு வ்யாக்யானங்களும், இன்னுமனேகங்களுமுண்டு. இவர்
திருநாமம். க்ருஷ்ண ஸமாஹ்வயர். க்ருஷ்ணபாதர். இவர்திருநக்ஷத்ரம்-ஆவ
ணிமாஸம் ரோகிணீநக்ஷத்ரம். இவர்தனியன் శ్రీమత్ కృష్ణసమాహ్వయేత్యాది.

இது நயினாராச்சாம்பிள்ளையருளிச்செய்தது. இவர்புரச்சிகர். அநந்தரம்இவர்திருக்குமாரராய் இவர்திருவடிகளிலே யாச்ரயித்தவர் நயினாராச்சாம்பிள்ளை. இவர்செய்தருளினப்ரபந்தம். జ్ఞానార్ణవం, ముక్తాభోగావళి, తత్త్వసంగ్రహం, చరమోపాయనిర్ణయం முதலாகப்பலவுமுண்டு. இவர்திருநாமம்- அபயப்ரதராஜபுத்ரர், நயினாராச்சாம்பிள்ளை யித்யாதி. இவர் தனியன் శ్రుత్యర్థసారజనకమిత్యాది. இதுவாதிகேஸரியழகியமணவாளஜீயரருளிச்செய்தது. அநந்தரம் இவர்திருவடிகளிலே யாச்ரயித்தவர் வாதிகேஸரியழகிய மணவாளஜீயர். இவர்செய்தருளின ப்ரபந்தங்கள்-திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி, த்ரமிடோப நிஷத்தாத்பரியஸாரம், தத்வதீபம், தீபஸங்கிரஹம், தீபப்ரகாசம், ரஹஸ்யாம்ருதம், புத்யாத்மசிந்தை, கீதாவ்யாக்யாநம். உடையவர் விஷயமாக ஒருக்ரந்தம், ந்ருஸிம்மாஷ்டகம். இவர் தனியன் అస్మద్వ్యఘేత్యాది, సుందరజామాతృమునేరిత్యాది. அனந்தரம் இவர் திருவடிகளிலே யாச்ரயித்தவர் வாதிகண்டீரவர். திருமாலையாண்டான் திருவம்சத்திலவர். இவர்செய்தருளின ப்ரபந்தம்ரஹஸ்யத்ரயஸாரமும் இன்னமும் க்ரந்தங்களுமுண்டு.

இன்னமும் நம்பிள்ளை,பெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீரங்காசார்யர் கேசவாசார்யர், ஸ்ரீநிவாஸாசார்யர், ஆதிவண்சடகோபஜீயர். நாராயணஜீயர், பராங்குசஜீயர், சடகோபஜீயர், பராங்குசஜீயர்முதலான பரம்பராவிசேஷமுமுண்டு. இது அஹோபிலமடஸம்ப்ரதாயம். இவர்கள்செய்தருளின ரஹஸ்யத்ரய ஜீவாதுமுதலானஷஷ்டிப் ரபந்தங்களும், புருஷார்த்த (సుధానిధి.) சுதாநிதியென்கிற ஸ்மிருதி நிபந்தநக்ரந்தமும், புருஷகாரமீமாம்ஸை,மிமாம்ஸாமணிதீபம், முதலானவை பலவும்‿பெரியவாச்சாம்பிள்ளை திருவுள்ளத்தை யநுஸரித்திருக்கும்.

மணவாளமாமுனிகள், திருவாய்மொழிப்பிள்ளை, குருகுலோத்தமதாஸர், பிள்ளைலோகாசார்யர், வடக்குத்திருவீதிப்பிள்ளை இத்யாதி. இது ரஹஸ்யக்ரந்த ஸம்ப்ரதாய குருபரம்பரை.

ஸூத்திரகாரரானவ்யாஸபகவான், அவர் சிஷ்யர் ப்ரும்மநந்தி, நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி ஆளவந்தார், பெரியநம்பி எம்பெருமானார், திருக்குருகைப்பிரான் பிள்ளான், எங்க ளாழ்வான். நடாதூர் பெரியம்மாள், கிடாம்பியப்பிள்ளார், வேதாந்தாசார்யர், ப்ரதிவாதிபயங்கரமண்ணன். இது ப்சுரமான ஸ்ரீபாஷ்யஸம்ப்ரதாயகுருபரம்பரை.

ஆழ்வான், ஆண்டான், ஆச்சான், அநந்தாழ்வான்,ஆஸூரிபெம்மான் முதலானருடைய வம்சஸ்த்தருக்குஸ்வவம்ச்யரில் ஸ்ரீபாஷ்யஸ்ம்ப்ரதாயகுருபரம்பராவிசேஷங்களுமுண்டு. இதில் கிடாம்பியாச்சான் திருவம்சஸ்தரான கிடாம்பிநயினார் பக்கலிலே மணவாளமாமுனிகளுக்கு ஸ்ரீபாஷ்யம். நடாதூர் பெரியம்மாள். ஸுதர்சனபட்டர். வேதாந்தாசார்யர் இத்யாதிச்ருதப்ரகாசி

இவர்களில் பிள்ளான் திருவாய்மொழிக்கு ஆராயிரப்படியும், பரமரஹஸ்யமும், அருளிச்செய்தார். எங்களாழ்வான் புராணரத்ந வ்யாக்யாநமும், ஸாரார்த்தசதுஷ்டயமென்கிற ரஹஸ்யமும், ஸங்கதி மாலையும், அருளிச்செய்தார். இவருக்கு ஸ்ரீவிஷ்ணு சித்தரொன்று திருநாமம். இவர்புரச்சூடர். பெரியவம்மாள் தத்வஸாரமும்,ப்ரமேயமாலை,ஸாரார்த்த சதுஷ்டயகாரிகைகள்,ஸத்ஸங்காதித்யாதிச்லோகத்ரயமும், அருளிச்செய்தார். அப்புள்ளார் ஸ்ரீபாஷ்யத்திற்கு ஒருவ்யாக்யாநமும், ந்யாயகுலிசம்முதலானவையுமருளிச்செய் தார். வேதாந்தாசார்யர் சதாதிகக்ரந்தமருளிச்செய்தார்.

நயினாராசார்யர் அநிர்வசநீயகண்டனம், விரோதபரிஹாரம், ஆசார்யமங்களம்,முதலானவையருளிச்செய்தார்.ப்ரதிவாதிபயங்கரமண்ணன். ஸ்ரீபாஷ்யத்துக்கொருவ்யாக்யாநமும், ப்ரபத்தியோககாரிகைகளும், பாகவதவ்யாக்யாநமும், சுகபக்ஷீயம், సుబాలోపనిషద్వివరణం இன்ன மனேகக்ரந்தங்களுமருளிச்செய்தார். இந்தஸ்ரீபாஷ்யஸம்ப்ரதாயபரம்பரைகளில் ஷடர்த்தஸங்க்ஷேபம், ப்ரக்ஞாபரித்ராணம், மாநயாதாத்ம்யநிர்ணயம், ப்ரபந்நகவசம், ந்யாயஸுதர்சனம், முதலானவை யருளிச்செய்தவர்களுமுண்டு.

இதித்ரிம்சத்ப்ரச்ன்யாம் குருபரம்பரா
விஷயத்விதீய ப்ரச்நோத்தரம்.

இப்படி யுபயஸம்ப்ரதாயகுருபரம்பரா ப்ரஸ்தாவத்தாலே தததப்யுபகதார்த்தங்களில் அஷ்டாதசார்த்தமான பக்ஷபேதத்தை அஷ்டாதசஸம்வாதமென்று வ்யவஹரிப்பார்களாகையாலே தத்விஷயத்ருதீய ப்ரச்னத்திற்குத்தரம் எங்ஙனே? யென்றில் பகவத்க்ருபை ஸஹேதுகையென்று வேதாந்தாசாரியருடையபக்ஷம் ; அது நிர்ஹேதுகையென்று லோகாசாரியருடையபக்ஷம். க-மோக்ஷரூபபலத்தில் பேதமில்லையென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம் ; அதிகாரிபேதேநபேதமுண்டென்று லோகாசார்யருடையபக்ஷம். உ. கர்மக்ஞானங்களுக்கு பக்த்யங்கத்வமல்லது ஸ்வதந்த்ரஸாதநத்வமில்லையென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அவற்றுக்கு ஸ்வதந்த்ரஸாதநத்வமும் அதிகாரிகளுடைய வபிப்ராய பேதேந உண்டென்று லோகாசார்யருடைய பக்ஷம். ந-ஸ்ரீக்குஸ்வரூபதோவிபுத்வமுண்டென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அவளுக்குஸ்வரூபதோவிபுத்வமில்லை; ஜீவாந்தரவத் அணுத்வமேயாகிலும் சக்திவிசேஷத்தாலேயுகபத் அனேகத்ரஸ்திதியும் விக்ரகவ்யாப்தியு முண்டென்று லோகாசார்யருடையபக்ஷம். ச-பிராட்டிக்கு மோக்ஷோபாயத்வமுண்டென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம்; அதில்லை, புருஷகாரத்வமேயுள்ளதென்று லோகாசார்யருடையபக்ஷம். ரு-வாத்ஸல்யம் தோஷாதர்சனமென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். அது தோஷபோக்யத்வமென்று லோகாசார்யருடையபக்ஷம்.சா-தயை, பரதுக்கநிராகரணேச்சாருபையென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். அது பரதுக்கதுக்கித்வரூபையான பரதுக்காஸஹிஷ்ணுதையென்று லோகாசார்யருடையபக்ஷம். எ.

ப்ரப்தநம் பக்திவன்மோக்ஷோபாயமென்று வேதாந்தாசார்யருடை யபக்ஷம் அது ஸித்தோபாயாதிகாரிவிசேஷஞதி ரூபமென்னு லோகாசாரியருடைய பக்ஷம். அ - ப்ரபத்தி அகிஞ்சனமாத்ராதிகாரையென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அது ஸகிஞ்சனுகிஞ்சன ஸாதாரண்யேனஸ்வரூப யாதாத்ம்யக்ஞானயுக்த வதிகாரையென்று லோகாசார்யருடையபக்ஷம். கூ - ப்ரபத்திவிதியிலே உபாயாந்தரத்யாகவசநம் அசக்திப்ராப்தத்யாகாநுவாதமென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அது உபாயாந்தரங்கள் ஸ்வரூபவிருத்தங்களாகையாலே ப்ராப்த்யங்க பூதத்யாக விதிரூபமென்று லோகாசார்யருடைய பக்ஷம். க0 - உபாயாந்தரம் ஸ்வாதிகாரிகளுக்கு அனுரூபமென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். அது பரதந்த்ர ஸர்வசேதநனுக்கு ஸ்வரூபவிருத்தமென்று லோகாசார்யருடைய பக்ஷம். கக - ப்ரபன்னனுக்கு விஹித கர்மானுஷ்டானம் பகவத்ப்ரீத்யர்த்தம் பகவதாக்ஞாமூலகமென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். அது ஆந்ரு சம்ஸயமூலகமென்று லோகாசார்யருடைய பக்ஷம். கஉ. ஆனுகூல்யாதி பஞ்சகம் ப்ரயோஜநாதிகளைப்போல் ப்ரபத்யங்கமென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அது அவகாத (𑌅𑌵𑌘𑌾𑌤) ஸ்வேதம் போலே ஸம்பாவிதஸ்வபாவமென்று லோகாசார்யருடையபக்ஷம். கங-ப்ரபத்தி நியமேந அபூர்வஸ்தாநீய ப்ரஸாத ஹேதுவென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். அது பரதப்ரபத்தியிலே வ்யபிசாரதர்சனத்தாலே ப்ரஸாதஹேதுவன்றென்று லோகாசார்யருடைய பக்ஷம். கச-ப்ரப்ன்னனுக்கு மஹாபாதகம் ப்ரஸக்தமானால் அகிஞ்சன விஷயத்தில் புநঃப்ரபதநம்ப்ராயச்சித்த மென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். பூர்வக்ருதப்ரபத்தி ஸ்மரணம் தத்ப்ராயச்சித்தமென்று லோகாசர்ர்யருடைய பக்ஷம். கரு—உத்தமாதிகாரியான நிக்ருஷ்டவர்ணப்ரபன்னன் வர்ணச்ரமாநுகுணமாக வாங்மாத்ரேண பூஜ்யனென்று வேதர்ந்தாசார்யருடைய பக்ஷம். அவன் குலதெய்வத்தோடொக்க பூஜ்யனென்று லோகாசார்யருடைய பக்ஷம். கசு - அணுபரிமாணஜீவஸ்வரூபத்திலே விபுஸ்வரூபனை யீச்வரனுக்கு பரிஸமாப்யவ்ருத்தியாவது அணுவஸ்துவிலேயிருந்துகொண்டே ஸர்வநிர்வஹண சக்தியுக்தனுயிருக்கையென்று வேதாந்தாசார்யருடையபக்ஷம். க்ருசமஹத்தீர்க்கஹ்ரஸ்வங்களான கடவ்யக்திகளிலே கடத்வஜாதி பரிஸமாப்யவர்த்திக்குமாப்போலே ஈச்வரன் பரிஸமாப்ய வர்த்திக்குமென்று லோகாசார்யருடையபக்ஷம். கஎ - கைவல்யம் அநித்யமென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அது நித்யமென்று லோகாசார்யருடையபக்ஷம். கஅ. இதொருப்ரகாரம் அஷ்டாதசவாதம்.

ப்ரகாராந்தரமுமுண்டு. எங்ஙனேயென்றில்-ஈச்வரலாபம் சேதநனுக்கு பலமென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். உடைமையினுடைய லாபம் உடையவனுக்காகையாலே சேதநலாப மீச்வரனுக்கு பலமென்று லோகாசார்யருடையபக்ஷம். க - வ்யாப்தி, தசதிக்ஸம்பந்த ரூபையென்று வேதாந்தாசார்யருடை பக்ஷம். அகடிதகடன ஸாமர்த்யத்தாலே அணுக்களிலே அந்தர்வ்யாப்தியென்று லோகாசார்யருடையபக்ஷம். உ - என் றிதொருபிரகாரம். இங்ஙனுமன்றிக்கே ப்ரணவத்தை யொழியவே திருமந்த்ரத்திற்கு அஷ்டாக்ஷ

ரத்வமென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். ஸ்வரரஹித ப்ரணவத்தோடே கூடியே அஷ்டாக்ஷரத்வம் ஸர்வாதிகாரமென்று லோகாசார்யருடைய பக்ஷம். ௧. நித்யமுக்தர்களுக்கு ஸ்ருஷ்ட்யாதி சக்தியில்லையென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். பகவந்நியமனமடியாக வவர்களுக்கும் ஸ்ருஷ்ட்யாதிசக்தியுண்டென்று லோகாசார்யருடையபக்ஷம். ௨-கைவல்யாநுபவாநந்தரம் பகவதநுபவ முண்டென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அதில்லையென்று லோகாசார்யருடைய பக்ஷம். ௩-கைவல்யஸ்தாநம் ப்ரக்ருதி மண்டலத்திலே யென்று வேதாந்தாசார்யருடைய பக்ஷம். அதற்குப் புறம்பென்று லோகாசார்யருடையபக்ஷம். ௪. இந்த நாலுபேதங்களையுங் கீழ்ச்சொன்ன பதினெட்டிலே பதினாலு பேதங்களையுங் கூட்டி அஷ்டாதசபேதமாக்கி ஒருப்பிரகாரமாகச் சொல்லுவர்கள். இன்னமும் ஸ்தோத்ரரத்ந சதுச்லோகி கத்யத்ரயாதிகளுக்குப் பெரியவாச்சாம்பிள்ளை செய்தருளின வ்யாக்யாநங்களோடே வேதாந்தாசார்யர் செய்தருளின வ்யாக்யானங்களுக்கு பகு விரோதங்களுண்டாய் தத்தத் பேதங்கள் பலவுமுண்டு. இது விஸ்தரபயத்தாலே யெழுதித்திலோம். இவற்றிற் கீழ்ச்சொன்ன பதினெட்டிலே ப்ரதமத் விதீய ஸப்தம தசமைகாதச த்வாத சாஷ்டாதசங்கள் வேதாந்தாசார்யருக் கபிமதமென்று அவர் ஸ்ரீஸூக்திகளிலே லபிக்கையாலே சில வாதங்கள் இவராலே கண்டிதங்களென்று சொல்லுகிறது. ரஹஸ்யத்திரயத்திற்கும் ச்ருதீதிஹாஸ புராணங்களுக்கும் ஸ்ரீபாஷ்யாதிகளுக்கும் புத்தி வைசித்ரியத்தாலே அர்த்தாந்தரவர்ணநம் பண்ணுகையாலே இந்த பேதங்களுண்டாய்த்தன.

இதித்ரிம்சத்ப்ரச்ந்யாம் த்ருதீய
ப்ரச்நோத்தரம்.

இவர்களுக்கு அந்யோந்ய விரோதம் ஆர்நாளிலே என்னகாரணத்தினாலே யுண்டாய்த்ததென்றில்:—உபயஸம்ப்ரதாய கூடஸ்தரான பிள்ளான் செய்தருளின வாறாயிரப்படி பரமரஹஸ்யம் முதலானவற்றை யடியொற்றிக்கொண்டு பெரியவாச்சான்பிள்ளை லோகாசார்யர்கள் செய்தருளின க்ரந்தங்களை யநுவதித்து தூஷிப்பதாக வேதாந்தாசார்யர் ப்ரவர்த்திக்க, வது பொறாமல் அதிப்ரபலராய் அதிவாக்மியான நயினாராச்சாம்பிள்ளை அத்தைப் பரிகரித்து அவர்க்ரந்தங்களை யநுவதித்து தூஷிப்பதாக க்ரந்தங்களைச் செய்ய, வாதிகேசரியழகியமணவாளஜீயர் முதலானாரும் அப்படியே செய்ய, லோகாசார்யாநுஜராய் பெரியபெருமாளுடைய வவதாரமான வழகிய மணவாளப்பெருமாள் நயினாரும் வேதாந்தாசார்யரோடே ப்ரத்யவஸ்தாநம்பண்ணி வாதங்களுங் க்ரந்தங்களுஞ் செய்தருள, ஒருநாள்வரையிலே நம்பெருமாள் புறப்பாட்டிலே நயினாருக்கும் தூப்பில் பிள்ளைக்கும் சில ப்ரதிக்ஞைகள் நடக்க, நயினாரும் பெருமாளெழுந்தருளுகிற நாலுவீதியிலும் நாலுப்ரகரணமாக பரமாசார்யரான பராங்குசருடைய ஹ்ருதயத்தை யுபந்யஸிக்க நாலுப்ரகரணத்திற்கும் நாலு திருமாலைகள் கழல, அவற்றை நம்பெருமாள் நயினாருக்கு ஸாதித்தருளி தூப்பில்பிள்ளையை முநிந்தோமென்ன, தூப்பில்ப்பிள்ளையும் மேல்நாட்டிற் கெழுந்தருளி சிலகாலங் கழிந்தபின்பு மீண்டும் கோயிலுக் கெழுந்தருளி லோகாசார்ய

ருடைய ஹ்ருதயாநுஷ்டாநமாக சில க்ரந்தங்களைச் செய்தருளினுரென்று சொல்லுவர்கள். தூப்பில்பிள்ளை பெரியவாச்சாம்பிள்ளையினுடைய வைபவத்தை ஸ்வப்நத்திலேகண்டு அநுதப்தராய் ஆச்சாம்பிள்ளை ஸந்நிதியிலே சென்று தேவரீர் திருவுள்ளத்திற்குப்புறம்பாக சிலவற்றைப்ரவர்த்திப்பித்தேன்;அபசாரப்பட்டேனென்று க்ஷமைகொள்ள வாச்சாம்பிள்ளையு முகந்தருளித்திருப்பாணுழ்வாரைத் திருவாராதனமாகப் பெறும்படி நியமித்தருளி விடைகொடுக்க தூப்பில்பிள்ளையு மன்றுமுதல் அவர் திருவுள்ளத்திற் கநுகுணமாக சில க்ரந்தங்களைச் செய்தருளினுரென்று சொல்லுவார்கள். இது தூப்பில்பிள்ளை யீடுபாட்டிலே வ்யக்தம். திருப்பாணுழ்வார் திருவாராதநமானமையும் தயாசதகந்யாஸதிலகாதிகளும் ஸம்வாதியாயிருக்கிறபடியாலே ஏகதேசாநுமதி ந்யாயத்தாலே தூப்பில்பிள்ளை யீடுபாட்டை ப்ரமாணமாகக்கொள்ளத் தட்டில்லை. அபிநவத்ருகக்ரந்தங்களுக்கு அந்யோந்ய விரோதத்தை யந்யதராநுகுணமாக நயிப்பித்து சமிப்பிக்கப்பார்த்தால் குகவிக்ருதவத் (కుకవికృతవదస్వార స్యం) அஸ்வாரஸ்யம் வரும். வைபவவாதமென்ருல் ப்ராமாண்யத்திற்குக் கொற்றையாம். ஆகையாலே திருமழிசைப்பிரானுடைய சைவவைஷ்ணவ ஸூக்திகளுக்குப்போலே தசாபேதேந விரோதம் சமிப்பிக்கவேணும். அதில் தசைகளுக்கு பௌர்வாபர்யநிச்சாயக (పౌర్వాపర్యనిశ్చాయక) ஹேத்வாகாங்க்ஷையிலே ஸயூத்ய సయూథ్యరిరில் ப்ரஸித்தமான தூப்பில்பிள்ளையீடு பாட்டை நிச்சாயகமாக வவர்களுக்கும் கொள்ளவேணும்.

இதித்ரும்சத் ப்ரச்நயாம் துரீய ப்ரச்ரோத்தரம்.

வேதாந்தாசார்யர் ஸ்ரீபாஷ்யநிர்வஹணம் பண்ணினபடி யென்னென்றில்- முற்காலத்திலே கோயிலுக்கு துருஷ்கராலே விப்லவம்வர லோகாசார்யர் நம்பெருமாளுக்குத் திருமேனிக்காவலாகவலசையெழுந்தருள,துருஷ்கர் பின்தொடராமைக்காக மற்றுள்ள பன்னீராயிரம் திருநாமங்களும் இருந்தபடியே யிருந்து தங்கள் திருமேனியைக் கத்திக்கிரையாக்க வப்போது வேதாந்தாசார்யர் யளவநஸ்தரா யிருந்தபடியாலே அபீதிஸ்தவம் అభీతిస్తవం செய்தருளித் தம்மையும் தப்பவைத்துக்கொண்டு ச்ருதப்ரகாசிகாகோசத்தையும் ரக்ஷித்து அநந்தரம் பாத்திரங்களிலே விநியோகித்தும் (అనయాభాష్యం భాష్యం) அநயாபாஷ்யம் பாஷ்யமென்கிறபடியே யம்முகத்தாலும் சததூஷண்யாதி க்ரந்தகரண முகத்தாலும் ஸ்ரீபாஷ்யநிர்வஹணம் பண்ணினுர். இத்தை (శ్రుతప్రకాశికా భూమౌయేనాదౌ పరిరక్షితేత్యాదియில்) ஆசார்யமங்களத்திலே நயினுராசார்ய ரருளிச்செய்தார். இவர்விஷயமாக (శ్రీమాన్వేంకటనాథార్యః) என்கிற தனியனை நயினுராசார்ய ரருளிச்செய்தார். திருவேங்கடமுடையான் ஸாதித்தருளினுரென்றுஞ் சொல்லுவர்கள். இவருக்கு பட்டர் திருநாமமான வேதாந்தாசார்யரென்கிற திருநாமத்தைப் பெரியபெருமா

ள் ஸாதித்தருளினார், ஸர்வதந்திர ஸ்வதந்திரரென்கிற திருநாமத்தை ஸ்ரீ ரங்க நாச்சியார் ஸாதித்தருளினார், என்றுஞ் சொல்லுவார்கள்.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் பஞ்சம

ப்ரச்நோத்தரம்.

வேதாந்தாசார்யர், குருபரம்பரையி லெங்கேயிருந்து பிரிவென்றில் - எம்பெருமானார், கிடாம்பியாச்சான், கிடாம்பிராமநுஜாசார்யர், ஸ்ரீ ரங்கராஜ குரு, கிடாம்பியப்புள்ளார், வேதாந்தாசார்யர், என்று க்ரமமாகையாலே கிடாம்பியாச்சான் வகுப்பிலே பிரிவு. அதிலிவர் திருவடிகளிலே யாச்ரயித்த வர் நயினாராசார்யரும் ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயரும். அதில் ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர் திருவடிகளிலே யாச்ரயித்தவர் வாத்ஸயவரதாசார்யர். அவ ரை யாச்ரயித்தவர் வரதவிஷ்ண்வாசார்யர். அவரை யாச்ரயித்தவர் தயாதீச குருத்தமர். அவரை யாச்ரயித்தவர் ந்ருஸிம்மார்யர். அவரை யாச்ரயித்தவர் வரதார்யர். அவரை யாச்ரயித்தவர் பராங்குசார்யர். அவரை யாச்ரயித்தவர் தாதாசார்யர். அநந்தரம் ராமானுஜாசார்யர். அநந்தரம் ஸ்ரீ வேங்கடார்யர். அநந்தரம் ஸ்ரீ வீரராகவார்யர். அநந்தரம் ஸ்ரீ ரங்கபதி தேசிகர். அநந்தரம் ஸ்ரீ ரங்கநாதார்யர். அநந்தரம் ஸ்ரீ தத்வஸித்தாஞ்சநநிர்னமாத்ரு வேதாந்தராமாநு ஜஜீயர். அநந்தரம் கோபாலாசர்யர். அநந்தரம் வேதாந்தராமாநுஜ ஜீயர். இவர்களுக்குள் சிலருக்கு தப்தசங்ராங்கனமும் க்ரந்தமுமுண்டு. சிலருக்கு க்ரந்தமாத்ரம் வேதாந்தாசார்யர் ஸம்ப்ரதாயத்திலே யென்று சொல்லுவார் கள். ப்ரம்மதந்த்ர ஜீயர்துடங்கி ஜீயர்கள்க்ரமமாகவந்த மடம் ப்ரம்மதந்த்ர ஜீயர் மடமென்று சொல்லுவர்கள். வேதாந்தாசார்யர் தம்முடைய சிஷ்யரா ன ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயருக்கு தம்முடைய திருவாராதநமான ஸ்ரீ ஹய க்ரீவரை யெழுந்தருளப்பண்ணிக் கொடுத்தாரென்று சொல்லுவர்கள். இவ ருக்கு பிதா அநந்தாசார்யர். அவருக்கு பிதா புண்டரீகாக்ஷயஜ்வா. வேதாந் தாசார்யர்குடி தூப்பில். அவதாரஸ்தலம் பெருமாள்கோவில். அவதரித்தவ ருஷம் கலியுகத்தில் சகாப்தம் ஆயிரத்து நூற்றுத் தொண்ணூத்திரண்டாவ தான சுக்லவர்ஷம். திருநாட்டிற் கெழுந்தருளினது சகாப்தத்தில் ஆயிரத்தி யிருநூற்றி முப்பத்திரண்டாவதான ஸௌம்யவருஷம்.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் ஷஷ்ட

ப்ரச்நோத்தரம்.

இவர்களுக்கும் அவர்களுக்கும் ஆசாரபேதம் வந்தபடி யென்னென்றி ல்-ஸ்மிருதி வெவ்வேறு பட்டிருக்கையால் அநுஷ்டாந விகல்பங்களுண்டாய் அதிகாரிகளுடைய ருசிபேதத்தாலே சிலர் சிலவற்றை யநுஷ்டிப்பதும், சிலர் சிலவற்றை யநுஷ்டிப்பதுமாயிருக்கும். வஸ்துநி விகல்பங்களுண்டாகாமையா லே தத்வவிஷயத்தில் அந்யோந்யவிருத்த பக்ஷங்களில் ஒன்றையழித்தல்லது ஒன்று ஜீவியாது. அநுஷ்டாநவிஷயத்தில் தேசாதிகாரி ருசிபேதத்தாலே ஐச்சிகவிகல்பமும் வ்யவஸ்திதவிகல்பமுங்கூடும். இன்னும்ஏகப்ரமாணத்திற்கு

புத்திவைசித்ரிய ப்ரயுத்த வாக்யார்த்த வர்ணநபேதத்தாலே யநுஷ்டாந பேதமுமுண்டு. సశిఖంవపనంకార్యమ్ என்கிற ஸந்யாஸி விஷயவசனத்திற்கும் சிகைவபநம் பண்ணவேணுமென்று சாங்கரமாத்வர்களும், சிகை வித்யமாநமாயிருக்கும்படி மற்றயது வபநம்பண்ணவேணுமென்று பாஸ்கரீயரும், நம்முடைய வர்களும், வாக்யார்த்தவர்ணநம் பண்ணுகையாலேயவர்களுக்குமிவர்களுக்கும் சிகித்வமுண்டாய்த்தது. அப்படியே இங்கு உபவாஸதிநத்திலேச்ராத்தரணமும் தத்த்யாகமும் வந்தது. அதில் அதத்பரசாஸ்த்ரத்தில் தத்பரசாஸ்தரம் ப்ரபலமாகையாலே ஸர்க்காதிபரபுராணாதிகளிற்காட்டில் ஆசாரபர ஸ்ம்ருதிக்கு ப்ராபல்யமுண்டென்று ஸ்ம்ருத்யுக்தப்ரகாரேண உபவாஸாதிதினத்திலும் மாத்ருபித்ருச்ராத்தம் பண்ணவேணுமென்றுவேதாந்தாசார்யருக்கு தாத்பர்யம். வைஷ்ணவாவைஷ்ணவஸாதாரணசாரபர ஸ்ம்ருதியில் காட்டில் அநந்யபஜநப்ரவ்ருத்த வைஷ்ணவாசாரபரபுராணாதிகளுக்கு ப்ராபல்யம் தத்பரசாஸ்த்ரந்யாய ஸித்தமாகையாலே தாத்ருச புராணாத்யுக்தமாகையாலும் தத்ததநுகுண ஸ்ம்ருதிவிஹிதமாகையாலும் உபவாஸதினத்தில் ச்ராத்தத்யாகமென்று தென்னாசார்யர்களுக்குத்திருவுள்ளம். இன்னமும் பகவத்வந்தநத்தில் ஸக்ருத்வமும் அநேகத்வமுமாகிறபேதமும் வைச்வதேவவிஷயத்திலும் ப்ரபத்தி யோகத்திலும் பேதமுண்டாயிருக்கும். க்ருஹாராதநத்தில் கண்டாநாதம் கூடுங் கூடாதென்றும் ஸமுத்ரஸ்நாநம்வேணும் வேண்டாவென்றும் இத்யாதிகள் பலவுமுண்டு. விதவாகேசகண்டனம் அதிகாரிவிசேஷத்தில் கூடாவென்றுமிடம் విధ్వదన్యస్త్రీణాం இத்யாதிவசநங்களைக்கொண்டுவடகலையார்பண்ணின ஸ்ரீவைகுண்ட தீக்ஷிதீயமென்கிற ஸ்ம்ருதி நிபந்தநக்ரந்தத்திலே ஸ்பஷ்டம். இவ்வுபயாசாரங்களுக்கும் ப்ரமாணோபபத்திகளை விஸ்தரபயத்தாலே எழுதித்திலோம்.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் ஸப்தம

ப்ரச்னோத்தரம்.

அநந்தரம் திருமண்காப்பு பேதப்ரச்நத்திற்குத்தரம். ஆசாரபேதத்திலே அந்தர்பூதமானாலும் ப்ருதக்ப்ரச்நம்பண்ணினபடியினாலே ப்ருதகுத்தரஞ்சொல்லுகிறோம். இங்கும் பூர்வோக்த ஸ்ம்ருதிவைவித்யத்தாலே ப்ரகாரபேதமுண்டு. அதில் హరేః పాదాకృతిం என்றும், సపద్మ హరిపాదాకృతిం என்றும் ப்ரமாண வசநங்களிருக்கையாலே அடிப்பாதமில்லாத திருமண்காப்பை யவர்க ளநுஷ்டிக்கிறார்கள். నాసాదౌద్వ్యఙ్గుళంత్యక్త్వా పాదం என்கிற பராசரஸம்ஹிதாவசநமாகிற உபபத்தியும், கோயிற்றிருமலை பெருமாள் கோயில் முதலானவிடங்களிலே திருக்கோலங்களிலும் கோபுரமண்டபப்ராகாராதிகளிலும் சிலாதாம்ரஸுதாரூபேண உபபாதத்தோடேகூடின ஊர்த்வபுண்ட்ரப்ரதிக்ருதிகள் பஹுகாலமாயிருக்கிற ஸம்ப்ரதாயமுமாகிய விந்த ப்ரமாணோபபத்தி ஸம்ப்ரதாயங்களாலே அடிப்பாதத்துடனே கூடத்திருமண்காப்பைத்தென்னாசார்யர்கள் அநுஷ்டிக்கிறார்கள். இன்னமும் (హరేః పాదాకృ

[illegible]) என்கிற ஸாமாந்ய வசநத்திற்கு ([illegible]) என்கிற விசேஷத்திலே பர்யவஸாநமாகையாலே குண்டலீத்யாதி விசேஷண ஸாமர்த்யத்தாலே அடிப்பாதம் ஸித்தம். இப்படியே புண்ட்ரங்களிலே திர்ய க்த்வோர்த்வத்வங்களாகிற வாக்ருதிபேதமும் பஸ்மம்ருத்திகாதி ரூபமானத்ர வ்யபேதமும், ஊர்த்வாக்ருதியிலே ஸச்சித்ராச் சித்ரபேதமும், மிருத்திகாத் ரவ்யத்திலே ச்வேதபீதாதிபேதமும் ஸ்ம்ருதிவைசித்ரயத்தாலே வந்ததிறே. அப்படியே இதிலும் ருசிபேதத்தாலே யநுஷ்டாநபேதமும் வந்தது.

இதித்ரிம்சத்ப்ரச்ந்யாம் அஷ்டம
ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ச்ருதப்ரகாசிகா வதரண ப்ரகாரப்ரச்நத்திற் குத்தரம் எங்ஙனேயென்றில்:—பட்டர் திருவம்சத்திலவரான வாக்விஜயபட்டர்குமார ரான சுதர்சநபட்டர்கோயில் நின்றும் சிஷ்யாநுக்ரஹார்த்தமாகவும் திவ்யதே சயாத்ரார்த்தமாகவும் தொண்டீரமண்டலத்திற் கெழுந்தருளி பெருமாள் கோயிலுக் கெழுந்தருள அங்கே அஸ்திகிரியினுடைய வடியிலே நடாதூர் பெரியம்மாள்,கிடாம்பியப்புள்ளார் முதலானுர்க்கு ஸ்ரீபாஷ்யம் நடத்தியருள அவற்றைக்கண்டு அநிதர ஸாதாரணமான அம்மாளுடைய உபந்யாஸ வை தக்த்யத்தை யநுபவித்து, அவர்ஸந்நிதியிலே தாமும் ஸ்ரீபாஷ்யம் அதிகரிப்ப தாகத் திருவுள்ளம்பற்றி தேசஸஞ்சாரந் தவிர்ந்து பன்னிரண்டு ஸம்வத் ஸரம் பெருமாள்கோயிலிலே வாஸம்பண்ணிக்கொண்டு அம்மாள் ஸந்நிதியி லே பாஷ்யம் அதிகரித்துக்கொண் டிருந்தார். இவர் உருக்கள்தோறும் உபந் யாஸ வைசித்ரயத்தை யஸங்கீர்ணமாக தரித்துக்கொண்டு மிதபாஷியாயிரு ப்பர். இவர் ஒருநாள் காலக்ஷேபத்திற் கெழுந்தருளுவதற்கு விளம்பப்பட அம்மாள், அப்புள்ளான்முதலான ஸ்ரீபாதமுதலிகள் திரண்டிருந்தவளவிலும் காலக்ஷேபம் துடங்காமல் இருக்க முதலிகள் எதற்காகவென்ன,சுதர்சநபட் டர் வரக்காணுமேயென்ன, இவர் க்ரஹணதாரணக்ஷமரன்றென்று கொ ண்டு முதலிகள் சிலவற்றை விண்ணப்பஞ்செய்ய அம்மாள், பட்டரெழுந்தரு ளின வளவிலே பட்டரோ நாம் சொன்னத்தி லேதாகிலுமக்குப் போருமாகில் ஒன்றைச்சொல்லுமென்ன எந்தவுருவிலுபந்யாஸத்தை யடியேன் விண்ணப் பஞ்செய்வதென்ன ஆகிலுருத்தொரு முபந்யஸியுமென்ன, பட்டரும் உருத் தொருமஸங்கீர்ணமாக சப்தாநுவாதத்தோடேகூட வுபந்யஸிக்க,அம்மாளும் முதலிகளும் போரவிஸ்மயப்பட்டார்கள். இப்படிபழுக்க குருகுல்வாஸம்பண் ணி லபித்த கஹநகம்பீரபாஷ்ய தாத்பர்யார்த்தங்களைப் பெரியபெருமாள் நியமனத்தாலே பட்டோலைகொண்டு ச்ருதார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கையா லே ச்ருதப்ரகாசிகையென்று திருநாமஞ்சாற்றினுர். புறம்புள்ள க்ரந்தகாரர ்களும் ஸ்வஸ்வ க்ரந்தங்களுக்கு [illegible] க்ருதாயாமென்றும், விரசி தாயாமென்று மித்யாதி விசேஷணமிடுவர்கள். இவர் அங்ஙனன்றிக்கே பரம ப்ராமாணிகராகையாலே ஸ்வகபோலகல்பிதத்வசங்காகளங்கமற விலிகிதாயா மென்று விசேஷணமிட் டருளினுர். இத்தைப் பெருமாள்கண்டருளிப்போ

ரவுகந்து இவர்க்கு வேதவ்யாஸரென்று திருநாமஞ் சாற்றினார். ஆகையிறே "ஸ்ரீரங்கராஜ திவ்யாக்ஞாலப்த வேதவ்யாஸா பரநாமதேயேந" வென்கிறது.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் நவம

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ஆறாயிரப்படி முதலாகிய பகவத்விஷய க்ரந்தங்களுக்கு ப்ரச்நோத்தரம் எங்ஙனேயென்றில் - ஸமஸ்க்ருத வேதாந்தங்களுக்கு வ்யாக்யாநஞ் செய்தருளின பாஷ்யகாரர் மாறனடிபணிந் துய்ந்தவராகையாலே தாமே த்ரமிடவேதாந்தமான திருவாய்மொழிக்கு வ்யாக்யாநஞ் செய்தருள ப்ராப்தமாயிருக்க அது செய்யாமல் பிள்ளானை நியமித்தது, இன்னும் இப்படி வ்யாக்யாநந்தரங்க ளவதரிக்கவேணுமென்று மபிப்பிராயத்தாலே யென்று தோற்றுவிக்கைக்காகவாயிற்று. ஆக உடையவர் "𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑍋 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑍃𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑌃" "புத்ரீக்ருதோ பாஷ்யக்ருதாஸ்வயம்ய:" என்று தமக்கு புத்ரஸ்வீகாரமான திருக்குருகைப்பிரான் பிள்ளானை நியமிக்க வவர் ஆறாயிரப்படி யருளிச்செய்தார். அநந்தரம் நஞ்சீயர் ஆதர்சவ்யாக்யாநமென்றலாம்படி யொன்பதினாயிரப்படி செய்தருளினார். அநந்தரம் அதற்கு நான்மடங்காக நம்பிள்ளை யுபந்யாஸமான முப்பத்தாறாயிரத்தை வடக்குத் திருவீதிப்பிள்ளை பட்டோலைகொண்டார். அநந்தரம் பெரியவாச்சாம்பிள்ளை ஆறாயிரப்படிக்கு நான்மடங்காக இருபத்திநாலாயிரப்படி செய்தருளினார். அநந்தரம் திருவாய்மொழிக்கு ப்ரதிபதார்த்தகதந ரூபமான பன்னீராயிரப்படியை வாதிகேஸரி யழகிய மணவாள ஜீயரருளிச்செய்தார். இவர்கள் பகவத்விஷய க்ரந்தகர்த்தாக்கள்.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் தசம

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் முப்பத்தாறாயிரப்படிக்கு பாஷ்யகாரர் நியமனமில்லையென்று சிலர் சொல்லுகிறார்களாம். அதென்னவென்கிற ப்ரச்நத்திற் குத்தரம் எங்ஙனேயென்றில் - பாஷ்யகாரர் காலத்திற்கும் முப்பத்தாறாயிரப்படி யவதரித்தகாலத்திற்கும் பஹு வ்யவதாநமாநபடியினாலே இது பாஷ்யகாரர் நியமநத்திற்கு யோக்யதை யில்லாமையாலே இதற்கு பாஷ்யகாரர் நியமநம் இல்லையென்று சொல்லுமது வ்யர்த்தோக்தி. நியமநயோக்யதை யுண்டாயிருக்க வதில்லாவிடிலிறே குற்றமாவது. ஆகையால் அது தோஷமன்று. இன்னமும் கீழ்ச்சொன்னபடியே பாஷ்யகாரர் தாமும் செய்தருளாதே பிள்ளானை நியமித்த விது மேலும் வ்யாக்யாநாந்தராநு மிதி வ்யஞ்ஜநார்த்தமிறே. ஆகையால் பவிஷ்யத்த்ருஷ்ட்யா வ்யாக்யாநங்கள் நாலுக்கும், ஆறாயிரப்படி நியமனமேநியமனமென்று ஸித்தமாகையாலே இதற்கு பாஷ்யகாரர் நியமநமில்லையென்றுசொல்லுகை துருக்தி. பரந்து 𑌪𑌰𑌸𑍍𑌤𑍁 இதற்குநம்பிள்ளை நியமநமில்லையென்பதொன் றுண்டு. அது பெரியபெருமாள் நியமனமுண்டாகவந்தால் லோகத்திற்கு அத்யந்தவிச்வஸநீயமாயிருக்குமென்று மபிப்பிராயத்தாலே சில

நாள் அதை நியமனமில்லையென்கிற வ்யாஜத்தாலே வாங்கி வைத்துக்கொண்டிருந்து பின்பெரியபெருமாள் நியமனத்தாலே ஈயுண்ணிமாதவர் முகமாக ப்ரவர்த்திப்பித்தாராகையாலே குற்றமாகாது. ஆகையால் இதுக்கொரு குற்றமில்லை.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் ஏகாதச ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ஆறுவார்த்தை முதலானவை விஷயமான ப்ரச்நத்திற்குத்தரம். எங்ஙனேயென்றில் - இளையாழ்வார் திருக்கச்சிநம்பி மடத்தேரவெழுந்தருளி நம்பியுடனே சென்று அடியேன் சில நினைவுகளை நினைத்திருந்தேன்; அவை யேதென்று பெருமாளுக்குத் தேவரீர் விண்ணப்பம் செய்து அவரருளிச்செய்ததை அடியேனுக் கருளிச்செய்ய வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அன்றிராத்திரி பெருமாளை யநுபவித்து இளையாழ்வார் விண்ணப்பத்தை விண்ணப்பஞ்செய்து அவற்றை யருளிச்செய்ய வேணுமென்ற அதற்குத் தேவப்பெருமா ளருளிச்செய்யும்படி :— பரதத்வம் நாமே. பேதமே தர்சநம். உபாயமும் ப்ரபத்தியே. அந்திமஸ்மிருதி வேண்டா. சரீராவஸானத்திலே மோக்ஷம். பெரியநம்பி திருவடிகளிலே யாச்ரயிப்பது. என்றிவ்வாறுவார்த்தைகளை யருளிச்செய்தார். இப்படி யிளையாழ்வா ரபிப்ராயத்தின்படியே திருக்கச்சிநம்பி முகமாகத் தேவப்பெருமா ளாறுவார்த்தை யருளிச்செய்தார். இப்படி தேவப்பெருமாள் அருளிச்செய்த பேததர்சநத்தை நிர்வஹிக்கைக்காக வேதாந்த ஸூத்ரபாஷ்யஞ் செய்தருளத் திருவுள்ளம்பற்றி யதற்கு போதாயன வ்ருத்திக்ரந்த கோசம் வேணுமென்று விசாரித்து, முற்காலத்திலே உத்தரதேசத்திலே ஒருராஜா விம்சதிலக்ஷ பரிமிதமான வ்ருத்திக்ரந்தத்தை யத்யேதாக்களுக்கு சுகாத்யயனார்த்த (సుఖాధ్యయనార్థ) மாக லக்ஷக்ரந்த பரிமிதமாக்கி வைத்தான். அது அந்தராஜவம்சபரம்பரையிலே யிருக்கிறதென்று கேட்டு ஆழ்வானுமுடையவரு மங்கேறவெழுந்தருளி ப்ரயத்நத்தினாலே கோசத்தைவாங்கித் திருக்கண்மலர்சாற்றி யநந்தரம் கோசம் துர்க்கடமானவாறே உடையவர் திருவுள்ளம் கன்ற, ஆழ்வான் உடையவரைப் பார்த்து கோசமில்லையென்று திருவுள்ளம் கன்றவேண்டா, அந்த வ்ருத்திக்ரந்தமடைய அஸ்கலித வர்ணாநுபூர்வீகமாக தேவருடைய கடாக்ஷத்தினாலே அடியேனுடைய சித்தத்திலே லிகிதமாயிருக்கிறதென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் போரவுகந்தருளி கோயிலேற வெழுந்தருளி ஸ்ரீபாஷ்யஞ் செய்தருள வுபக்ரமித்து வ்ருத்யநுஸாரேண செய்தருளுவதாக ப்ரதிக்ஞைபண்ணியதற் கனுகுணமாக வாழ்வான் விண்ணப்பஞ்செய்த வ்ருத்திக்ரந்த சகலங்களைத் தாம் ஸ்வக்ருதபாஷ்யார்த்த ஸம்வாதமாக மத்யே மத்யேயெடுத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யாதிகளைத் தலைக்கட்டி யருளினார். அநந்தரம் ஸ்ரீபாஷ்யத்தைக் கொண்டு திக்விஜயம் பண்ணவேணுமென்று திருவுள்ளம்பற்றி அங்கு நின்றும் புறப்பட்டு பூர்வதிகுபக்ரம పూర్వదిగుపక్రమ மாக சோளபாண்டிய கேரளதேசங்களுக்கெழுந்தருளி அங்கு ஸாளக்ராமாதி திவ்யதேசங்களை யெல்லாம் சேவித்துக்கொண்டு அங்கிருக்கிறகுத்ருஷ்டி

வித்வான்களை ஜயித்து பட்டிமண்டபத்தைக்கிட்டி ஸரஸ்வதீபண்டாரத்தே ற வெழுந்தருளினவளவிலே ஸரஸ்வதிதானே வாசலைத்திறந்துகொண்டு எதிரே புறப்பட்டு உடையவரைப் பார்த்து [illegible] கப்யாஸ வாக்யத்திற்கு அர்த்தம் கேழ்க்க, இவரும் கப்யாஸமென்று இரவிகர விகஸிதமென்றபடி யென்ன, ஸரஸ்வதியும் ஸந்துஷ்டையாய் ஸ்ரீபாஷ்யத்தை சிரஸாவஹித்து பாஷ்யகார ரென்று திருநாமஞ்சாற்றி ஹயக்ரீவரையு மெழுந்தருளப் பண்ணிவைத்துக் கொடுத்து மிகவு முபலாளித்து முன்னிங்குவந்த சங்கரன் "கப்யாஸமென்று மர்கடப்ருஷ்டமென்றபடி" யென்று நிஹீநார்த்தத்தைச் சொன்னான். நீரொன் கருத்தறிந்து யதார்த்தமாக ச்லாக்யார்த்தத்தைச் சொன்னீரென்று சொன் னாள்.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் த்வாதச ப்ரச்நோத்தரம்.

பாஷ்யகாரருக்கு முன் விசிஷ்டாத்வைத விஷயமான பாஷ்யாதிகளு முண்டோவென்கிற ப்ரச்நத்திற்குத்தரம் எங்ஙனேயென்னில் - த்ரமிடபாஷ்ய யகாரர் செய்தருளின த்ரமிடபாஷ்யமென்கிற பாஷ்யமும், தத்விஷயமான டீகையென்கிற வ்யாக்யாநமும், அதிப்ராசீனரான பகவத் ச்ரீவத்ஸாங்க மிச்ர ராலே செய்யப்பட்ட விசிஷ்டாத்வைத விஷய ப்ரம்மஸூத்ர பாஷ்யமுமுண் டு. டங்கத்ரமிடகுஹதேவ பாருசி ப்ரப்ருதிகள் பண்ணின விசிஷ்டாத்வைத விஷய க்ரந்தங்களுமுண்டு. போதாயனவ்ருத்தியும் விசிஷ்டாத்வைத விஷ யையாய் எல்லாத்திற்கும் ப்ரதம ப்ரவ்ருத்தையாயிருப்பதுண்டு. நாதமுனி களுமாளவந்தாரும் விசிஷ்டாத்வைத விஷயமாகச் செய்தருளின க்ரந்தங் கள் பலவுமுண்டு.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் த்ரயோதச ப்ரச்நோத்தரம்.

இத்தால்டங்க த்ரமிடகுஹ தேவாசார்யராரென்கிற சங்கைப்ரச்நத்தி ற்கு உத்தரம் அர்த்தாதுக்தம். இவர்கள் ப்ரம்மஸூத்ர வ்ருத்திகாரரான போதாயந சிஷ்யபரம்பராந்தர்ப் பூதர்.

இதித்ரிம்சத்ப்ரச்நயாம் சதுர்தச ப்ரச்நோத்தரம்.

பாஷ்யகாரர்முதல் பாஷ்யப்ரவர்த்தக ரின்னாரென்று மிடம் த்விதீய ப்ரச்நத்திலே சொன்னோம். எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் செய்தருளி தம்மு டைய திருத்தங்கையாரான பூமிப்பிராட்டிக்குக் குமாரரான வாத்ஸயவரத விஷ்ண்வார்யர் என்னப்படுகிற நடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்ய ஸிம்மாஸ னாதி ராஜ்யத்தை ஸாதித்தருளினார். அவர்முதலாயு மொரு பரம்பரையுண்டு.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் பஞ்சதச ப்ரச்நோத்தரம்.

இப்படி மணவாளமாமுனி பர்யந்தத்தில் நடுவுள்ள வர்த்த விஷயங்க ளான ப்ரச்நோத்தரங்களுக் கநந்தரம் மணவாளமாமுனிகளுக் கநந்தரம்

ததீயாஷ்டதிக்கஜ விஷயப்ரச்நத்திற்குத்தரம் எங்ஙனேயென்றில் - வாநமாமலை ஜீயர், திருமலையிலே யெம்பெருமானார் ஜீயர், கோயிற்கந்தாடை யண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளான், அப்பிள்ளை, பட்டர்பிரான் ஜீயர், ப்ரதிவாதி பயங்கரமண்ணனென்று இப்படி அஷ்டதிக்கஜங்களுக்குத் திருநாமம். இவர்களுக்குத் திருவிலச்சினையும் உபயவேதாந்தமும் மணவாளமாமுனிகள் ஸாதித்தருளினர். இவர்களிலே வாநமாமலை ஜீயர் (బాల్యాత్ప్రభృతిసుస్నిగ్ధః) பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தராய் துடர்ந் தடிமைசெய்யு மவராயிருப்பர். கந்தாடையண்ணன் அனவரதம் ஸேவித்துக்கொண்டு அத்யந்தம் ப்ரீதிவிஷயரா யிருப்பர். ப்ரதிவாதி பயங்கரமண்ணன் ப்ரதிபக்ஷநிரஸ நபூர்வகம் ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையா யிருப்பர். அப்பிள்ளை ஜீயர் நியமனத்தாலே யைந்து திருவந்தாதிக்கு முரைசெய்தருளி யதிராஜவிம்சதிக்கு வ்யாக்யாநமுஞ் செய்தருளினர். அப்பிள்ளான் மடத்திற்கு ஸர்வபரத்தையும் நிர்வஹித்துக் கொண்டு போருவர். பட்டர்பிரான் ஜீயர், பாதச்சாயாபந்நராய் தேவுமற்றறியேனென் றிருப்பர். அது தோற்ற வந்திமோபாய நிஷ்டையென்கிற க்ரந்தத்தை யருளிச்செய்தார். கோயிற்கந்தாடை யண்ணனையும் ப்ரதிவாதிபயங்கர மண்ணனையும் தம்முடைய திருப்பேரனரான ஜீயர் நயினருக்கு ஸ்ரீபாஷ்யமும் முப்பத்தாறுயிரப்படியும் ஸாதிக்கும்படி நியமித்தருளினர்,

இதித்ரிம்சத்ப்ரச்ங்யாம் ஷோடச

ப்ரச்நோத்தரம்.

வாநமாலை ஜீயர் திருமுடிவர்க்க ப்ரச்நோத்தரம் எங்ஙனேயென்றில் - மணவாளமாமுனிகள், வாநமாமலை ராமானுஜஜீயர் - க - களமூர் வரதமுநி - உ - செண்டலங்கார ஸ்வாமி - ங - பெரியரங்கப்ப ஸ்வாமி - ச - திம்மய்யங்கார் ஸ்வாமி - ரு - எம்பெருமானார் ஸ்வாமி - சா - பெரியதிருவேங்கட ஸ்வாமி - எ - கோனப்பமுனிகள் ஸ்வாமி - அ - சின்னரங்கப்பஸ்வாமி - கூ - சின்னதிருவேங்கடஸ்வாமி - க0 - பெரியதெய்வநாயக ஸ்வாமி - கக - திருவேங்கடஸ்வாமி - கஉ - கூரத்தாழ்வான்ஸ்வாமி - கங - ஸ்ரீவத்ஸசிந்நஸ்வாமி - கச - திருவேங்கடஸ்வாமி - கரு - திருவேங்கட ராமானுஜஸ்வாமி - கசா சடகோபராமானுஜஸ்வாமி - கஎ.

இதித்ரிம்சத்ப்ரச்ங்யாம் ஸப்ததச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் வாநமாமலை ஜீயருடைப வஷ்டதிக்கஜங்கள் விஷயமான ப்ரச்நத்திற்குத்தரம். எங்ஙனேயென்னில்-தொட்டய்யங்காரப்பை-க. ஸமரபுங்கவாசாரியர் - உ. சுத்தஸத்வம் அண்ணு - ங. அப்பச்சியாரண்ணு - ச. இராமாநுஜப்பிள்ளை - ரு. திருக்கோட்டியூரையர் - சா. க்ஞானக்கண்ணராத்தான்-எ. வெள்ளைக்கால்சிற்றன் - அ. శ్రీమన్మహార్యరణపుంగవశుద్ధసత్వశ్రీశ్రీ నివాసభరతానుజ శుద్ధపాదాః| గోష్ఠీపురేశవరదా ఖ్యగురూ జయంతివానాద్రియో

గిన ఇమేఽష్టదిశాంగజాస్తే. வானமாமலைஜீயர் தம்முடைய தனியன்க்ரமம். శ్రీశైల, రమ్యజామాతృ యోగీంద్ర, కృపావాప్యమహాశైల, శ్రీరామానుజయోగీంద్ర, స్వామ్యాపయన్తృమునివర్య, శ్రీమద్వానమహాశైల, శ్రీమద్వరమునీంద్రాంఘ్రి, శ్రీమద్యతీంద్ర శరజిచ్చరణారవింద, శ్రీమచ్ఛఠారియతిరాట్పద పద్మభక్త, శ్రీవానాచలయోగివర్య కృపయాసంసిద్ధబోధోజ్జ్వలం, శ్రీమద్వానాద్రియోగీంద్ర పదపఙ్కజసంశ్రయం, వానాచలయతీంద్రాంఘ్రి సరసీరుహషట్పదమ్, శ్రీమద్వ్యమహాశైల యతిరాట్పద సంశ్రయం, శ్రీమద్వ్యమాద్రి యోగీంద్ర పాదపద్మమధువ్రతం, శ్రీవేంకటేశ కరుణాప్త సమస్తవిద్యం, శ్రీమచ్ఛఠారిచరణాంబుజరాజహంసం, శ్రీవానాద్రిమునీంద్ర పాదజలజ ద్వంద్వాశ్రయాదుల్లసద్భక్త్యాదిగుణాంబురాశిం, విద్యాజ్ఞానసువృత్త మంగళగుణైః పూర్ణస్య గోప్తుస్సతాం. ஆக - ௧௮ - தனியன்கள். ஸமக்ரமாக வெழுதப்புக்கால் க்ரந்தவிஸ்தரமாமென்று தனியன்களுடைய ப்ரதீகோபாதானமாத்ரம் பண்ணிற்று. வானமாமலைஜீயருடைய வஷ்டதிக்கஜங்களான தொட்டையங்காரப்பை, ஸமரபுங்கவாசார்யர். சுத்தஸத்வமண்ணா. அப்பச்சியாரண்ணா. முதலானவர்களுடைய தனியனுமுண்டு.

இதித்ரிம் சத்ப்ரச்ங்யாம் அஷ்டாதச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ஆதிவண் சடகோப ஜீயர்மடத்தி லவர்விஷயமான ஏகவிம்சதி ப்ரச்நோத்தரம் எங்ஙனே யென்றில் :—பெரிய வாச்சாம்பிள்ளை துடங்கியாதிவண் சடகோபஜீயரளவும் இப்பால் மூன்று நான்கு பட்டத்தளவிலும் திருவிலச்சினை விஷயமாகவும் க்ரந்தவிஷயமாகவும் பெரிய வாச்சாம்பிள்ளையொன்றேயாகக் கலப்பற்று நடந்துவந்தது. இப்பால் ருசிபேதத்தாலே ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம் ஸ்வாசார்ய ஸம்ப்ரதாய விருத்தமே யாகிலும் அத்தையதிகரித்துக்கொண்டு போந்து ததனுகுணப்ரதிபத்யநு வர்த்தனமும் பண்ணிக்கொண்டு போந்தார்கள். இப்படி யிருந்தாலும் ஐயந்த்யுத்ஸவ தத்பாரணாதி விஷயங்களிலே ஸம்ப்ரதாயாதிலங்கநம் பண்ணினார்களில்லை. ஈடு முப்பத்தாறாயிரம்முதல் திருமந்திரார்த்த விஷயமான முமுக்ஷுப்படி பர்யந்தமான பூர்வஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் விட்டார்களில்லை. ஆகையால் இப்படி உபய ஸம்ப்ரதாயமிச்ரராயிருப்பர்கள். இந்தஆதிவண் சடகோபஜீயருடைய மடம் மணவாளமாமுனிகளுடைய நியமநத்தாலே யுண்டாய்த்ததென்று தத்ஸம்ப்ரதாயஸ்தருஞ் சொல்லுவார்கள். ஆதிவண் சடகோபஜீயர் திருநாராயண புரத்திலே செல்வப்பிள்ளை ஸன்னிதியிலே மணவாளமாமுனிகளைத் திருப்ரதிஷ்டைபண்ணிவைத்து தனிக்கோவிலும் கட்டிவைத்தாரென்று மவர்கள் சொல்லுவர்கள். இவர் திருநக்ஷத்ரம் - புரட்டாசியில் கேட்டை.

இதித்ரிம் சத்ப்ரச்ங்யாம் ஏகோநவிம்ச

ப்ரச்நோத்தரம்.

இந்தமடத்தில் வடகலையார் ப்ரவேசவிஷயமான ப்ரச்நத்திற்கு உத்தரம்:- முன்னெழுதிய நாலு மூன்று பட்டத்திற் கிப்பால் வரவர ஸஹவாஸ விசேஷத்தாலும் ருசிவிசேஷத்தாலும் புண்ட்ரபேதமும் ஸம்ப்ரதாயவிருத்தமாக மடத்து சிஷ்யர்கள் ஏகாதசீச்ராத்தாதிகள் ப்ண்ணிக்கொண்டு வர, அத்தை நிவாரியாமல் ராமானுஜ தயாபாத்ரத்தையுங் கூட்டி யநுஸந்தித்துக் கொண்டும் போருகையாலே இந்தமடத்திலே வடகலையார்கள் ப்ரவேசித்தார்களென்றும்படி யிருந்தார்களல்லது பெரிய வாச்சாம்பிள்ளையோடே திருவிலச்சினை ஸம்பந்தமற்ற சுத்தவடகலையார் இந்த மடாதிபதிகளாய் இருப்பதில்லை. இந்தமடத்தில் ஜீயர்களுடைய திருமுடிவர்க்கத்தின் தனியன்கள் విష్ణుశ్రీపృతనాపతిః. என்று துடங்கி శ్రీకృష్ణపాదాభిధం శ్రీరంగేశ్వరకేశవార్య కమలావాసాఙ్ఘ్రి భజే కేశవం, కేశవార్యకృపాపాత్రం, ప్రపద్యే నిరవద్యానాం, శఠారినారాయణసంయమీంద్ర, ప్రణమ్య నారాయణ, శ్రీమన్నారాయణముని శ్రీశఠారి పదాశ్రయం, శ్రీనివాసముని శ్రేష్ఠాల్లబ్ధ వేదాంతసంపదమ్, వేదాంతోత్తర వీరరాఘవ, విద్యాంభోధిపరాంకుశాఖ్య మునిరాట్, వీరరాఘవ వేదాంతమునివర్య పదాశ్రయమ్, శ్రీవీరరాఘవముని శ్రుతిశాలి సూరి, శ్రీవాసవీర రఘువర్య పరాంకుశాది, శ్రీవీరరాఘవ యతీంద్ర పరాంకుశాది రామానుజార్య కమలానిధి యోగివర్యః. సంప్రేక్షితం కరుణయా పరిపూర్ణబోధం శ్రీరంగనాథముని శేఖరమాశ్రయామః. இதுஇப்போதிருக்கிறஜீயர் தனியன்.மற்றவைகளும்ஸமக்ரச்லோகலேகநம் பண்ணினால் க்ரந்தவிஸ்தரமா மென்று ப்ரதீகங்கள் மாத்ரம் யெழுதித்து.அவை கண்டுகொள்வது.

இதித்ரிம் சத்ப்ரச்நயாம் விம்ச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ப்ரம்மதந்த்ர ஜீயர்மடத்திற்கும் பரகாலஜீயர் மடத்திற்கும் நிஷ்பத்தி க்ரமப்ரச்நத்திற்குத்தரம். எங்ஙனேயென்னில்:- வேதாந்தாசார்யர் திருவடிகளிலே யாச்ரயித்த பேரருளாளய்யனென்கிறவர் அவர் ஸன்னிதியிலே ஸகலசாஸ்த்ரங்களையுமதிகரித்து வேதாந்தத்திலே அதிநிபுணராயிருக்கையாலே நீர் ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ரரொன்று வேதாந்தாசார்யராலே திருநாமஞ் சாற்றப்பட்டு பின்பு ஸந்யஸித்து ஆசார்ய பரதந்த்ரரா யிருந்தார். இவருக்கு வேதாந்தாசார்யர் தம்முடைய ஹயக்ரீவரை யெழுந்தருளப்பண்ணிக் கொடுத்தார். ப்ரம்மதந்திர ஜீயரும் பின்பொருஜீயருக்கு ஹயக்ரீவரை யெழுந்தருளப்பண்ணிக்கொடுக்க அன்றுமுதல்அவர் நியமனத்தாலே அந்தமடம்நடந்து வருகிறது. இந்த ஜீயர்களுடைய திருமுடிவர்க்கம் வண்சடகோபஜீயர் மடத்திலே பிரிவு. இதை பரகாலஜீயர் மடமென்று வண்சடகோபஜீயர் மடத்தார் சொல்வர்கள்.

இந்தமடம் நூற்றைம்பது ஸம்வத்ஸரமாய் நடந்து வருகிறதென்றுஞ் சொல்லுவர்கள்.

இதித்ரிம் சத்ப்ரச்ங்யாம் ஏகவிம்ச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் முனித்ரயமென்று லோகத்தில் வ்யவஹரிக்கிற வேதாந்த ராமாநுஜஜீய ரவர்களுக்கும் வண்சடகோபஜீய ரவர்களுக்கும் மடத்தாருக்கும் ஆசாரபேத மென்னென்ன வித்யாதி ப்ரச்நோத்தரம். எங்ஙனே யென்றில்:— முனித்ரய ஸம்ப்ரதாயத்தில் அவர்கள் ஸ்ரீஜயந்திவிஷயத்திலே ஸர்வ விதவேதாத்யாகம் வைஷ்ணவர்களுக்கு ஆவச்யகமாயிருக்க, சந்த்ரோதயவேதாத்யாகம்மாத்ரம் ஆவச்யகம், மற்றை வேதாதோஷமன்றென்றும்; அஹோராத்ரம் உபவாஸமும் மற்றைநாள் பாரணையும்; ஸ்ரீராமநவமி விஷயத்திலும் ந்ருஸிம்மஜயந்தி விஷயத்திலும் அஹோராத்ரோபவாஸமும் மற்றைநாள் பாரணையும் ; ஸ்ரீதத்வவிஷயத்தில் ஈச்வரதத்வாந்தர்ப்பாவமும் ஐச்சிக பகவச்சேஷத்வமும்; பரந்யாஸவிஷயத்தில் பிராட்டிக்குப்ரயோகபேதேந ஸம்ப்ராதாந்யேநோத்தேச்யத்வமும் விசேஷணவிசேஷ்யபாவேந உத்தேச்ய த்வமும்; இன்னும் சிலபேதங்களையுங்கொள்ளுவர்கள். வண்சடகோபஜீயர் ஸம்ப்ரதாயஸ்தர் ஜயந்திவிஷயத்தில் ஸர்வவேதாத்யாகமும்ராத்ரியிலே உத்ஸவாந்தத்திலே பாரணையும் ந்ருஸிம்மஜயந்தியிலே ஸாயங்காலமானவாறே உத்ஸவாந்தத்தில்பாரணையும் ஸ்ரீராமநவமி விஷயத்தில்திவாபாரணையும் பிராட்டிவிஷயத்தில்வேதாந்தாசார்யோக்தபஞ்சகங்களிலே విభుత్వేసతి జీవత్వేసతి జీవః என்கிறத்விதீயபக்ஷமும் பிராட்டிக்கு வ்யாஸஜ்ய வ்ருத்யுபாயத்வமாதல் ஸம்ப்ராதாந்யேநப்ரத்யேக வ்ருத்யுபாயத்வமாதல் விசேஷணவிசேஷ்யபாவேந உபாயத்வமாதல் விசேஷ்யகதோபாயத்தில் லக்ஷணமான விசேஷணோபாயத்வமாதலில்லை; பின்னை புருஷகாரத்வமாத்ரமுள்ளது. என்றுங் கொள்ளுவர்கள். இன்னுமிரண்டு மடஸ்தர்களுக்கும் ப்ரபத்திப்ரயோகாதிகளிலும் பேதமுண்டு. இந்த விரண்டுமடஸ்தர்களுக்கும் பரகால ஜீயர்மடஸ்தர்களுக்கும் தத்வவிஷயத்திலும் பேதமுண்டு. எங்ஙனேயென்றில்:— பரகால ஜீயர்ஸம்ப்ரதாயஸ்தர் பிராட்டிக்கு ப்ரம்மத்வமும் ஜகத்வ்யாபாரமும் நிக்ரஹ கர்த்ருத்வமாகிற தத்வவிஷயத்தில் ப்ரகாரபேதமும் யதிவந்தநவிஷயத்தில் ஆசார்யனை க்ரஹியையுங்கூட யதியானவன் வந்தநம்பண்ணக் கூடாதென்றித்யாத்யாசாரபேதங்களுங் கொண்டார்கள். கீழ்ச்சொன்ன விரண்டு ஸம்ப்ரதாயஸ்தரும் இவையொன்றுங் கொண்டார்களில்லை. ஆகையா லிந்த ஸம்ப்ரதாயத்திற்கு தத்வவிஷயத்திலும் ஆசாரவிஷயத்திலும் பரஸ்பரபேத முண்டு.

இதித்ரிம் சத்ப்ரச்ங்யாம் த்வாவிம்ச

ப்ரச்நோத்தரம்.

தென்னசார்யர்களிலே யிப்படி தத்வவிஷயத்திலும் ஆசாரவிஷயத்திலும் பேதமுண்டோவென்கிற த்ரயோவிம்சதி ப்ரச்நோத்தரம். எங்ஙனேயெ

ன்றில்:— கீழ்ச்சொன்னவர்களைப்போலே தத்வவிஷயத்திலும் ஆசாரவிஷயத்திலும் நிபந்தந க்ரந்தங்களிலே அநுவாதமும் தூஷணமும் பண்ணும்படியான ப்ரபலவிரோத மொன்றுமில்லை. இந்த, ஸ்ரீபாததீர்த்த க்ரஹணவிஷயத்தில் த்விவாரமென்று வானமாமலையார். த்ரிவாரமென்று கந்தாடையார். இங்ஙனே ஸூக்ஷ்மபேதங்கள் சிலதுண்டு. அவ்விரண்டிற்கும் [illegible] என்றும் [illegible] என்றும் ப்ரமாணமுண்டு.

இதித்ரிம்சத்ப்ரச்ந்யாம் த்ரயோவிம்ச

ப்ரச்நோத்தரம்.

சதுஸ்ஸப்ததி பீடஸ்தவிஷயமான சதுர்விம்சதி ப்ரச்நோத்தரம் எங்ஙனேயென்றில்:— ஆளவந்தார் திருப்பேரனாரப்பிள்ளையப்பன் - ௧. பெரியநம்பிகுமாரர் ஸ்ரீபுண்டரீகர் - ௨. திருக்கோட்டியூர் நம்பிகுமாரர் தெக்காழ்வான் - ௩. திருமலையாண்டான் குமாரர் சுந்திரத்தோளிணையார் - ௪. பெரிய திருமலைநம்பிகுமாரர்களில் இராமாநுஜநம்பியும்-திருமலைநம்பியும் - ௫. கூரத்தாழ்வான் குமாரர்களான பட்டரும் ஸ்ரீராமப்பிள்ளையும் - ௬. முதலியாண்டானவர்குமாரர் கந்தாடையாண்டான் - ௭. நடுவிலாழ்வான் - ௮. கோமடத்தாழ்வான் - ௯. திருக்கோவலூராழ்வான் - ௧௦. திருமோகூராழ்வான்-௧௧. பிள்ளைப்பிள்ளையாழ்வான்-௧௨. நடாதூராழ்வான்-௧௩. எங்களாழ்வான்- ௧௪. அனந்தாழ்வான்-௧௫. மிளகாழ்வான்-௧௬. நெய்யுண்டாழ்வான் - ௧௭. சேட்டலூர் சிறியாழ்வான் - ௧௮. வேதாந்தியாழ்வான்-௧௯. கோவிலாழ்வான்-௨௦. உக்கலாழ்வான் - ௨௧. அரணபுரத்தாழ்வான் - ௨௨. எம்பார் - ௨௩. கிடாம்பியாச்சான் - ௨௪. கணியனூர்சிறியாச்சான் - ௨௫. கொங்கிலாச்சான்-௨௬. ஈச்சம்பாடியாச்சான் - ௨௭. திருமலைநல்லான் - ௨௮. செட்டம்பள்ளிஜீயர்-௨௯. ஈச்சம்பாடிஜீயர் - ௩௦. திருவள்ளறைஜீயர் - ௩௧. ஆட்கொல்லிஜீயர் - ௩௨. திருநகரிப்பிள்ளை - ௩௩. காராஞ்சிஸோமயாஜியார் - ௩௪. அலங்காரவேங்கடவர் - ௩௫. நம்பிகுருந்தேவர் - ௩௬. செருப்பள்ளிதேவராஜபட்டர் - ௩௭. பிள்ளையுரந்தையுடையார் - ௩௮. திருக்குறுகைப்பிரான் பிள்ளான் - ௩௯. பெரியகோயில்வள்ளலார் - ௪௦. திருக்கண்ணபுரத்தெச்சான்-௪௧. ஆசூரிப்பெருமாள் - ௪௨. முனிப்பெருமாள் - ௪௩. அம்மங்கிப்பெருமாள் - ௪௪. மாருதிப்பெரியாண்டான் - ௪௫. மாறொன்றில்லா மாருதியாண்டான்- ௪௬. ஸோமயாஜியாண்டான் - ௪௭. ஜீயராண்டான்- ௪௮. ஈச்வராண்டான்- ௪௯. ஈயுண்ணிப் பிள்ளையாண்டான் - ௫௦. பெரியாண்டான் - ௫௧. சிறியாண்டான் - ௫௨. குஞ்சிப்பூர்சிறியாண்டான் - ௫௩. அம்மங்கியாண்டான் - ௫௪. ஆளவந்தாராண்டான் - ௫௫. அருளாளப்பெருமாள் எம்பெருமானார் - ௫௬. தொண்டனூர்நம்பி - ௫௭. மருதூர்நம்பி - ௫௮. மழுவூர்நம்பி - ௫௯. திருக்குருங்குடிநம்பி - ௬௦. குரவிநம்பி - ௬௧. முடும்பைநம்பி - ௬௨. வடுகநம்பி - ௬௩. வங்கிப்புரத்து நம்பி - ௬௪. ஸ்ரீபாரங்குசநம்பி - ௬௫. அம்மங்கியம்மாள் - ௬௬. பருத்திக்கொல்லையம்மாள் - ௬௭. உக்கலம்

மாள் - ௬௮. சொட்டையம்மாள் - ௬௯. முடும்பையம்மாள் - ௭௦. குமாண்டூர்பிள்ளை - ௭௧. குமாண்டூர் இளையவில்லி - ௭௨. கிடாம்பிப்பெருமாள்-௭௩. ஆர்க்காட்டுப்பிள்ளான்-௭௪. இவர்களுடைய தனியன் శ్రీలక్ష్మణార్య శ్రుతి మౌళి భాష్యద్విస్త్రింశదాసంప్రదమిడశ్రుతేశ్చ । సంప్రాప్య తేనైవ గురూన్ కృతాంస్థాన్ భజే చతుస్సప్తతి పీఠసంస్థాన్. என்றுஇவர்கள் எழுபத்திநாலு சிம்மாஸநாதிபதிகள். பாஷ்யகாரர் நாளையிலே தத்வவிஷயத்திலும் ஆசாரவிஷயத்திலும் அந்யோந்யம் ஸ்புடவிரோதத்தை யுடைத்தான தென்கலை வடகலை பேதமில்லை. பின்பு வேதாந்தாசார்யர்காளிலே ஸ்புடவிரோதத்தாலே பேதமுண்டாய்த்தது. அப்போது எழுபத்திஞலு ஸிம்மாஸனுதிபதிகளுடைய வம்சஸ்த ரிருந்தார்கள். அவர்களிலே சிலர் வேதாந்தாசார்யருடைய ஸம்ப்ரதாயஸ்தராய்க் கொண்டு வடகலையானுர்கள். அவர்க ளாறொன்றில்பெரிய திருமலைநம்பி வம்ச்யர் - ௧. நடுவிலாழ்வான் வம்ச்யர் - ௨. நடாதூராழ்வான் வம்ச்யர் - ௩. கிடாம்பியாச்சான் வம்ச்யர் - ௪. ஈச்சம்பாடியாச்சான் வம்ச்யர் - ௫. திருமலைநல்லான் வம்ச்யர் - ௬. ஸோமாஜியாண்டான் வம்ச்யர் - ௭. ஈயுண்ணிப் பிள்ளையாண்டான் வம்ச்யர் - ௮. வங்கிப்புரத்து நம்பிவம்ச்யர் - ௯. இவர்களெல்லாரிலும் நாலு திருமாளிகையார் தென்கலையாரும் நாலுதிருமாளிகையார் வடகலையாருமாக நடந்துக்கொண்டு வருகிறது. மற்ற அறுபத்தியைந்து ஸிம்மாஸனுதிபதி வம்ச்யரில் பூர்த்தியாய்ப் போனது போக இருக்கிறவர்களெல்லாரும் அன்றுமுதல் இன்றளவாக தென்கலையாராகவே நடந்துவருகிருர்கள். இதிலே பிள்ளை லோகாசார்யரும் ப்ரதிவாதிபயங்கர மண்ணனும் எழுபத்திஞலு பீடஸ்தரிலே ஒருவரான முடும்பைநம்பியினுடைய திருவம்ச்யரென்று சொல்லுவர்கள்.

இதித்ரிம்சத் ப்ரச்ந்யாம் சதுர்விம்ச
ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் இந்த எழுபத்திநாலு ஸிம்மாஸனுதிபதிகளிலே ஸப்தகோத்ரத்தாரும் அஷ்டகோத்ரத்தாரும் அந்தர்ப்பூதர். இந்த ஸப்தகோத்ர வ்யவஸ்த்தையாருடைய நியமனத்தாலே யென்கிற பஞ்சவிம்ச ப்ரச்நத்திற்கு உத்தரம். எங்ஙனேயென்றில்:— கோயிற்கந்தாடை யண்ணனும் எரும்பியில் ஸ்ரீரங்கராஜரும் முன்பு லாடபுரத்திற்கு ஸ்தாலீபாகார்த்தம் போனவிடத்திலே நடந்த லாடபுரஸ்தருடைய வாசார வைகல்யாதிகளையும் தமக்கு அந்த தேஹாநுபந்தத்தில் ருசியில்லாமையையும் பெரியஜீயருக்கு விண்ணப்பஞ்செய்ய, அதைக்கேட்டருளிய பெரியஜீயரும் வைலக்ஷண்யமுடையராய் பூர்வமேபிடித்து அந்யோந்ய ஸம்பந்தமுடையராய்ஸமான ப்ரவரதோஷமில்லாமலிருக்கிறவாதூலஹாரீத ஸ்ரீவத்ஸகௌண்டிந்யகௌசிக பரத்வாஜாத்ரேயகோத்ரஸ்தர் எழுவர்களையும் அந்யோந்ய ஸம்பந்தம் பண்ணிக்கொண்டு வரும்படியும் கோத்ராந்தரத்திலே ஸம்பந்தம் பண்ணுதே யிருக்கும்படியும் ஏதத்கோத்ரங்களிலே குடிக்கந்தாடைமுதலான வந்ய ஸம்பந்தமில்லாதிருக்கும்படியும் அண்ணனையும் வேடலப்பையையும் எரும்பியிலப்பா முதலானுரையும் நி

யமித்து அத்தைத் தப்பாமைக்குத் தம் ஸ்ரீபாதத்திலாணையிட் டருளினர். இச்சேதிக்கு எரும்பி, விராலி, வேடல், திருவிண்ணகர், திருக்குடந்தை, முறப்பாக்கம், கடிகை, கச்சிநகர், ஸ்ரீபெரும்பூதூர், திருநகையூர், திருவெவ்வுளூர், திருமழிசை, முதலானவிடங்களி லுண்டான தாசரதிவம்ச்யரான வாதூலருக்கும் ஸ்ரீபாஷ்யகாரவம்ச்யரான ஹாரீதருக்கும் மற்றும் ஏததநுபந்திகளான கோத்ராந்தரஸ்தருக்கும் ஜீயர் ஸ்ரீமுகம்வர அத்தை சிரஸாவஹித்து அன்று முத லின்றளவும் அந்த நியமனத்தாலே நடந்துவருகிறது. వాధూలవత్సకౌండిన్య హారితాత్రేయకౌశికాః | భారద్వాజశ్చ సప్తైతే వాధూలాః పరికీర్తితాః. என்று இந்த நியமனத்திற்குட்பட்ட விந்த ஏழுகோத்ரத்தாருக்கும் கந்தாடையாரென்று வ்யபதேசம் நடந்துவருகிறது. இவர்களெல்லாரும் எழுபத்திநாலு ஸிம்மாஸனாதிபதிகளுக்குள் சேர்ந்த முதலியாண்டான் முதலானருடைய திருவம்ச்யர். இது ஸப்தகோத்ர வ்யவஸ்தா ப்ரகாரமிருக்கும்படி. இந்த ஸப்தகோத்ரத்தாரில் வாதூலவம்ச்யராய் ஸ்ரீபாஷ்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராய் ஜகஜ்ஜீவாதுவான போளிப்பாக்கம் நயினர், பெரியதிருமலை நம்பி வம்ச்யராய் சடமர்ஷணகோத்ரரான எட்டூர் சிங்கராசாரியரையும் மற்றவேழு கோத்ரஸ்தரையுங் கூட்டி யஷ்டகோத்ரமாக நியமித்தருளினர். போளிப்பாக்கம் நயினர் ஸப்தகோத்ரஸ்தர்; அஷ்டகோத்ரத்திற்கு நியமனகர்த்தா. இதுஅஷ்டகோத்ர வ்யவஸ்த்தை. இவர்களிலும் ப்ரயாச: எழுபத்திநாலு ஸிம்மாஸனாதிபதி வம்ச்யர்களுண்டு. திருவனந்தாழ்வான் பூமியைவஹிக்க அஷ்டதிக்கஜங்கள் ஸஹகரிக்க ஸப்தகுலபர்வதங்களும் பூமிக்குஅஞ்சுராணி விட்டாப்போலே யிருக்கும். அதுபோலதிருவநந்தாழ்வானுடைய திருவவதாரமான பெரியஜீயர் பராங்குசபரகால யதிவரர்களுடைய ஸம்ப்ரதாயநிர்வஹணமாகிற பாரத்தை வஹித்தருளுவதற்கு அஷ்டதிக்கஜங்களும் ஸஹகரித்துஸப்தகோத்ரமும் ஸம்ப்ரதாயத்திற்கு ஆணிவிட்டாப்போலே வ்யவஸ்தாபகமாயிருக்கும்படி. கோத்ரமென்று பர்வதத்திற்கும் குலத்திற்கும் பேரொன்று சொல்லுவர்கள்.

இதித்ரிம்சத் ப்ரச்ங்யாம் பஞ்சவிம்ச
ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் ஏவம்பூதரான மணவாளமாமுனிகளுக்கு ஈடுவந்தக்ரமம் அவர் பெருமாளுக்கு ஸாதித்தருளினக்ரமம் முதலானவை விஷயமான ப்ச்ரநத்திற் குத்தரம். எங்ஙனேயென்றில் ஈடுவந்தக்ரமம் த்விதீயப்ரச்நோத்தரத்திலே சொல்லித்திறே. ஒருநாள் முதலிகளுடனேகூட பெருமாளை பெரியஜீயர் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருக்கப் பெருமாளும் ஜீயரை யருளப்பாடிட்டருளி நம் பெரியதிருமண்டபத்திலே திருவாய்மொழிப் பொருளை ஈடுமுப்பத்தாறுயிரம் துடக்கமான வ்யாக்யாநங்களோடே நடத்துமென்று நியமித்தருள, ஜீயரும் மிகவும் ஹ்ருஷ்டராய் உபக்ரமிக்கிறவளவிலே பெருமாளும் நாச்சிமாரும் எழுந்தருளி ஸ்ரீஸேநாபதியாழ்வான் நம்மாழ்வார் துடக்கமான ஆழ்வார் பதின்மரோடும் அனைத்துப் பரிகரத்தோடும் கூடப்பெருந்தி

ருவோலக்கமாக வெழுந்தருளியிருக்க, இவர் துடங்கி யர்த்தம் நடத்தும் படியைத் திருச்செவிசாற்றியருளி, இப்படி யொருஸம்வத்ஸரம் நிர்விக்நமாக நடந்து சாற்றியருளும்போது முன்புபோலே பெரியபெருமாள் பேரோலக்கமாக வெழுந்தருளியிருந்து திருச்செவிசாற்றியருளி, மிகவு முவந்து தீர்த்தம் முதலான வரிசைகளைப்ரஸாதித்து அந்த வுகப்பின்மிகுதியாலேஅகில ஸ்ரீவைஷ்ணவர்களையுங் குறித்து நம் வீடு முதலான நூற்றெட்டு திருப்பதியிலும் இவர் தனியனை శ్రీశైలేశదయాపాత్ర ச்ரீசைலேசதயாபாத்ரமாதியாய் ப்ரபந்தாநுஸந்தாநம் நடத்திப்போருங்கோளென்று நியமித்தருளினர். இது யதிந்த்ரப்ரவணப்ரபாவத்தின்படி. இது ஸ்ரீபாதத்து முதலிகள் மூவர் நாலுபாதமருளிச்செய்தாரொன்று மதற்குச்சேரும். அப்பெரியதிருவோலக்கத்திலே சாற்றுமுறை திருச்செவிசாற்றி யருளினபின்பு பெரியபெருமாள் ஒரு பாலனாய் வந்து இந்த ஸ்ரீசைலேசதயாபாத்ரமாதியாய் இந்தத் தனியனை யருளிச்செய்து அந்தர்த்தாநகதரானார். அது முன்பே பதரிகாச்ரமத்தி லெம்பெருமான் அங்கே யிந்தத்தனியனை யனுஸந்திக்கும்படி நியமித்தருளினனென்று பின்பு சில நாளையிலே யங்குநின்றும் வந்தவர்கள் சொன்னார்களாய், இங்குநடந்த வித்தையு மங்குநடந்தவத்தையுங் கூட்டி யநுஸந்தித்துக் கோயில் முதலான ஸர்வதேசங்களிலுண்டான ஸகலப்ராமாணிகரும் இந்தத்தநியனை பகவத்ப்ரணீதமென்று நிர்ணயித்துக் கோயில்களிலும் திருமாளிகைகளிலும் இந்தத்தனியனைப்ரபந்தாதியிலே யநுஸந்தித்துக்கொண்டு வருகிறார்களென்றுஞ் சொல்லுவர்கள். இது அயோத்யை ராமாநுஜய்யங்கார்படி, என்கிற க்ரந்தத்தில்படி. இன்னுந் தடஸ்தங்களான திருவரங்கம் பெரியகோயில் ஒழுகுகளிலே யிவ்வர்த்தங்கள் ஸ்பஷ்டங்களாயிருக்கும். இன்னமும் மாசிமாஸத்திலே க்ருஷ்ணபக்ஷத்வாதசியிலே பெரியபெருமாள் தம்முடைய திருக்கோயிலனைத்துப்பரிஜநங்களுடைய படித்தனத்தைக்கொண்டு பெரிய ஜீயருடைய திருவத்யயநத்தை அத்யாபி நடத்துகிற விதுவும் இவரிடத்தில் அவர் முப்பத்தாறயிரப்படி கேட்டமையில் ப்ரமாணம். இதுவும் – "வாசியறிந்த வதரிநாராயணனார்மணங்கொட் டேசுடையெந்தை மணவாளமுனி சீர் தழைப்பச்சிரீசை,லே சதயாபாத்திரமென்று மிம்மாமந்திரத்தைத்,தேசிகராய்க்கண்டுரைத்தார் வையகஞ்சீருறையவே." என்று கோயில் கந்தாடையண்ணனும் பெரியஜீயர்விஷயமான "கண்ணிநுண்சிறுத்தாம்பு"என்கிற ப்ரபந்தத்திலே முடிவிலே யருளிச்செய்தார். இன்னமும் సో౽యంభూయస్స్వయముపగతో దేశికైస్సంసదం తే శ్రుత్వాగూఢంశఠరిపుగిరా మర్థతత్త్వంత్వనుక్తమ్ । ఆగోపాలంప్రథయతితరా మద్వితీయం త్వదీయంవాచాందూరం వరవరముసే వైభవం శేషశాయీ என்றும் ఆచార్యత్వం త్వధికమితియత్ ఖ్యాతమామ్నాయముఖ్యై శ్శ్రీశ్రీమాన్ భవతి భగవా నీశ్వరత్వం విహాయ | మంత్రందత్వావరవరమునేమహ్యం స్త్రీరత్నం త్వదీయం దేవశ్శ్రీమాన్ వరవరమునేవర్తతే దేశికత్వే என்றும் பரமாப்தரான வெறும்பியப்பாவும் அருளிச்செய்தார். இப்படி யநந்யதாஸித்த అనన్యథాసిద్ధ ப்ரபல

ப்ரமாணங்களாலே இதினுடைய மாஹாத்ம்யம் வ்யக்தம். இன்றுரின்றொன்றுதே ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களையும் குறித்து நம் வீடுமுதலான நூற்றெட்டு திருப்பதியிலும்இவர் தனியனை ஸ்ரீசைலேச தயாபாத்ரமாதியாய் திவ்ய ப்ரபந்தாநுஸந்தாநம் நடத்திப்போருங்கோளென்று பெரியபெருமாள் ஐ்ஞாபித்தருளியிருக்க, ராமாநுஜதயாபாத்ரமாதியாய் திவ்யப்ரபந்தானுஸந்தாநம் நடக்கவேணுமென்று நிர்ப்பந்தித்துக்கொண்டு திவ்யதேசக்ஷோபம் பண்ணுமவர்களுக்கு பகவதாக்ஞாதிலங்கநமன்றி வேறு ப்ரயோஜந மில்லையென்று மிடம் நிருபகர்களுக்கு ஸுஜ்ஞேயம்.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் ஷட்விம்ச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் பூர்வப்ரஸ்துதமான ராமாநுஜ தயாபாத்ரவிஷயமான ஸப்தவிம்சதி ப்ரச்நோத்தரம் எங்ஙனேயென்றில்:— இந்த "ராமாநுஜதயாபாத்ரம்" என்கிற தநியன் பரகாலஜீயர் நியமித்தாரென்கிற லோகப்ரஸித்திக்கு மபவாதக ப்ரமாணமில்லாமையாலே அவருண்டாக்கினரென்று மிடம் யுக்தம். இந்தத் தநியன் அவருக்குமுன்னே யுண்டு, அவர் இதற்கு ப்ரவசநமாத்ரம் பண்ணினார், அதுகொண்டு அவர்செய்தாரென்று லோகப்ரஸித்தி; என்று சொல்லப்பார்க்கில் வேதாந்தாசார்யருடைய வைபவவிஷயமாக நடுவிலாழ்வான் திருவம்சஸ்தரான மத்யேஸுதர்சநாசார்யர் முதலானார்பண்ணினஅனுஷ்டுப் ச்லோகப்ரபந்தத்திலும் ஆசார்யவ்ருத்த ச்லோகப்ரபந்தத்திலும் இந்தத் தநியனை ப்ரதிபாதியாமையாலே யிதுமுன் புண்டென்று மிடம் அனுபபந்நம். வேதாந்தாசார்யருடைய வவதாரவிஷயமாகவும் ராமானுஜதயாபாத்ரமென்கிற தநியன்விஷயமாகவும் ப்ரம்மாண்டபுராணத்தில் க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதமான நாலு அத்யாயமுண்டென்று வைத்துக்கொண்டிருக்குமவர்கள் அத்யந்தம் அபஹாஸ்யர். எங்ஙனேயென்றில்:— "విశ్రాణనీనీవిబుధవైరిందూధనీనాం పద్మాసనేనపరిచారవిధౌప్రయుక్తాః ఉత్ప్రేక్ష్యతేబుధజనైరుపపత్తిభూమ్నా ఘంటాహరేస్సమజనిష్ట యదాత్మనేతి" என்று ஸ்வப்நவ்ருத்தாந்தாதிகளாகிற உபபத்திகளாலேபுதஜநங்கள் தம்மைகண்டாவதாரமாக உத்ப்ரேக்ஷிக்கிறார்கள்; அதாவது:— உத்கடகோடிக ஸம்சயமான ஸம்பாவநாத்மகக்ஞாநத்திற்கு விஷயமாக்குகிறார்களென்று புராண ப்ரதிபாத்யராக ஸ்வாபிமதரான வேதாந்தாசாரியரோ யருளிச் செய்கையாலே புராணமில்லையென்று மிடம்ஸித்தம். புதஜநங்கள் கண்டாவதாரமென்று ஸம்சயிக்கிறாரென்று மிதிற் காட்டில் பரம ரிஷிகள் புராணங்களிலே கண்டாவதார மென்று தம்மை நிச்சயருபேண ப்ரதிபாதித்தார்கள் என்றால் ப்ரசம்ஸாதிசயம்ஸித்திக்குமே. ஆகையாலிவ்விஷயத்தில் புராணமில்லையென்று மிடம் ஸித்திக்கையாலே யிவ்விஷயத்தில் புராணமுண்டென்று மவர்கள் அத்யந்தமபஹாஸ்யர். இந்தத்தநியன் உண்டாய் நூற்றிருபது ஸம்வத்ஸரமுண்டு. இத்தை மேல்நாட்டிலே க்ருஷ்ண தேவராய வுடையார், சிங்கதேவராயவுடையார், கண்டீரவ நரஸதேவராயவு

டையார் என்கிற விவர்களை பரகாலஜீயர் அனுவர்த்தித்து வச்யராக்கிக்கொண்டு அவர்கள் பலத்தினாலே இந்தத் தனியனையுங் கூட ப்ரபந்தாதியிலே யநுஸந்திக்கும்படி திருநாராயணபுரத்திலே ஸைவித்தார். இந்த ராஜக்ருஹத்திலே போக்குவரத்தாயிருக்கிற சிங்காரம்மனென்கிற ஸ்வசிஷ்யை யடியாக ராஜாநுமதியாலே வேதாந்தாசார்யரைத் திருநாராயணபுரத்திலே ப்ரதிஷ்டைபண்ணி வைத்தாரென்று சொல்லுவர்கள். இவருடைய யத்நம் தொண்டைமண்டலத்தில் பலியாமற்போச்சுது. பகுவிடங்களிலே பலியாமலிருந்தது. கோயிலிலே யிந்தபரகாலஜீயர் ப்ரஸக்தியில்லை.

இதி த்ரிம்சத்ப்ரச்நயாம் ஸப்தவிம்ச

ப்ரச்நோத்தரம்.

பரகாலஜீயர் பெருமாள்கோவிலுக்கு வந்த விஷயமான வஷ்டாவிம்ச ப்ரச்நோத்தரம் எங்ஙனேயென்றில்:— பரகாலஜீயர் பெருமாள் கோவிலுக்குவந்து அழகிய மணவாளஜீயர், ஆத்தான்ஜீயர், திருமலைதாதாசார்யர், இவர்கள் யெழுந்தருளியிருக்கிற நாளையிலே திருமலைதாதாசார்யர் திருமாளிகையிலேவந்து "ராமாநுஜதயாபாத்ரம்" என்கிற தனியனை இந்தகச்சிநகர் பதினெட்டுத்திருப்பதியிலும் ப்ரபந்தாநுஸந்தானத்திற்கு ஆதியிலே யநுஸந்திக்கும்படி பண்ணவேணுமென்ன, திருமலை தாதாசார்யரும் "கோயிலழகிய மணவாளஜீயர் அயோத்யை ராமாநுஜய்யங்கார் நாள்துடங்கி பகுகாலமாய் நடந்துவந்து முன்பு அஸ்மத்கூடஸ்தரான தாததேசிகரும் நடப்பித்து பெரியஜீயருக்குத் தனிக்கோவிலுங் கட்டிவைத்து அங்கே யெழுந்தருளப்பண்ணிவைத்து இப்படி யன்றுமுதலின்றளவு மவிச்சிந்நமாய் நடந்துவருகிற விந்த ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்கிற தனியனை நாம் விரோதிப்பதில்லை" யென்று சொல்ல, பரகாலஜீயரும் அத்யந்தம் கோபித்துக்கொண்டு தம்முடைய கமண்டலுவைத் திருமலைதாதார்யர் திருமாளிகைவாசலிலே யுடைத்து சபித்துப்போனார். திருமலை தாதாசார்யரும் பேரருளாளருடையவும் பெரியஜீயருடையவும்பெருங்கருணையாலே நிர்த்துக்கராய்ஸுகோத்தரராய்க்கொண்டு பதினெட்டு திருப்பதியிலும் அத்தைச சேர்ந்த ஆழ்வார்கள் ஆசார்யர்கள் ஸந்நிதிகளிலும் "ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்கிற" தனியனை நடப்பித்துக்கொண்டு வந்தாரென்று ப்ரஸித்தம். கூடஸ்தரான தாதாசார்யர் தம்முடைய சிஷ்யரான ராயனுடைய ராஜ்யதந்த்ரம் பண்ணிக்கொண்டு வருகிறபோது தென்னேரி உடைந்துபோனதாய் ஸர்வப்ரகாரத்தாலும் கட்டுப்படாததாய் தாமேபோய் கட்டிவைக்க வேணுமென்று புறப்பட்டு, வழியாக வஸ்திகிரியிலே யேறிப்பேரருளாளரைஸேவிக் கவர,அப்பொழுது சதிராகவாழ்திடுவர் தாமென்கிற சாற்றுமுடிவு செவிப்பட, அத்தை யுபச்ருதியாகக்கொண்டு ஹர்ஷப்பட்டு நாம்போகிற கார்யம் தலைக்கட்டினால் இப்ரபந்தகர்த்தாவான பெரியஜீயருக்குத்தனிக்கோவில் கட்டிவைக்கிறேனென்றுப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு போனவிடத்தில் யேரியுடைப்பு ஸுகமாய்க் கட்டுப்பட்டதாய் மீண்டு

அதித்வரையுடனே வந்து பெருமாளுடைய திருநந்தவநத்துள்ளிருக்கிற சது ஸ்தம்பமண்டபத்தை மூன்றுபக்கம் சுவரடைத்து கர்ப்பக்ரஹமாக்கி யதிலே பெரியஜீயரை ப்ரதிஷ்டைபண்ணிவைத்து க்ரமேணமஹாபண்டபம் மடப்பள்ளி முதலானவை கட்டிவைத்தாரென்று ப்ரஸித்தமிறே.

இதித்ரிம்சத் ப்ரச்நாம் அஷ்டாவிம்ச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் தென்கலையார் வடகலையார் என்கிற வ்யபதேச பேதவிஷயமான ப்ரச்நத்திற்குத்தரம் எங்ஙனேயென்றில்:— கலையென்று வித்யையாய் தென்கலையென்றுதமிழ்வித்யை. வடகலையென்று ஸம்ஸ்க்ருதவித்யை.அதில் விவக்ஷாவிசேஷத்தாலே தென்கலையென்று ஆறாயிரப்படி முதலான திவ்யப்ரபந்த வ்யாக்யாநங்களையும், வடகலையென்று ப்ரம்மஸூத்ரபோதாயந வ்ருத்தி ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களையும் வ்யபதேசிப்பதாய், தத்ப்ரவர்த்தகத்வத்தாலே ஆழ்வான், எம்பார், பட்டர்,நஞ்சீயர், நம்பிள்ளை, முதலானோரைத் தென்கலையாரென்பதாய்,ஸ்ரீபாஷ்யாதி ப்ரவர்த்தகத்வத்தாலே நடாதூர் பெரியம்மாள் முதலானோரை வடகலையாரென்பதாய், உபயர்க்கு முபயப்ரவர்த்தகத்வ முண்டாயிருக்கச் செய்தேயும் "பூயஸாவ்யபதேசா மல்லக்ராமாதிவத்" என்கிற ந்யாயத்தாலே தத்தத்ப்ரவர்த்தகத்வ ப்ராசுர்ய மடியாகத் தென்கலையாரென்றும்வடகலையாரென்றும் வ்யபதேசபேத மிருக்கிறது. இன்னமும் இவர்களுக்குத்தென்னாசார்யரென்றும் வடமாசார்யரென்றும் வ்யபதேசபேதமுண்டு. இதுபரீக்ஷக வ்யவஹாரபேத மிருக்கிறபடி. இதுவன்றிக்கேயிராமானுஜனோடே கூடினதிருமண்காப்பும் "ஸ்ரீசைலேசதயாபாத்ர"மாகிற தனியன்விஷயமான ப்ராவண்யமாகிற விவற்றையிட்டு சிஷ்யாசார்ய ஸாதாரண்யேந தென்கலையாரென்கிற வ்யவஹாரமும், ஸ்ரீராமாநுஜநிழந்த திருமணும் ராமானுஜதயாபாத்ரத் தனியன்விஷயமான ச்ரத்தையுமாகிற விவற்றையிட்டு வடகலையாரென்கிற வ்யவஹாரமுமுண்டு. இது பரீக்ஷகபாமரஸாதாரண வ்யவஹாரமிருக்கிறபடி. அயமத்ரநிஷ்கர்ஷ:—தென்கலையாரில் வாநமாமலைமடம். கோயில் ஸ்ரீரங்கராஜஜீயர்மடம், திருமலையில் பெரியஜீயர்மடம், சிறியஜீயர்மடம்,பெருமாள் கோவில் அழகியமணவாளஜீயர் மடம், முதலானமடங்களும் தத்ஸம்பந்திகளும், முதலியாண்டான், பட்டர், அநந்தாண்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, முதலான அசேஷாசார்ய புருஷவம்ச்யர்களும் தத்ஸம்பந்திகளுமாகவிவர்களெல்லாம் பிள்ளான்முதலான கூடஸ்த ஸம்ப்ரதாயத்திற் கனுகுணமான பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலானோர் ஸம்பந்தத்திலே பஞ்சஸம்ஸ்காரத்தைப் பெற்று, மந்த்ரோப தேஷ்டாக்களானவர்களருளிச்செய்த மந்திரார்த்தவிஷய ப்ரபந்தங்களை யத்யாதரத்துடனே யதிகரித்துக்கொண்டு, ததுக்தங்களான ஸ்வரூபாநுரூப வ்ருத்தங்களையும் நிஷித்த காம்ய ஸ்பர்சரஹிதங்களுமாய் அத்யாவச்யகங்களுமான வர்ணாச்ரமதர்மங்களையும் அநுஷ்டித்துக்கொண்டு தத்வவிஷயத்திலும் அநுஷ்டாநவிஷயத்தி

னும் அந்யோந்யவைஷம்ய விரஹிதராய் ஸ்ரீபாஷ்யவிஷயத்தில் வேதாந்தாசார்ய ஸம்ப்ரதாயமுடையரா யிருக்குமவர்கள் ததநுகுணமாக ஸ்ரீபாஷ்யகுரு பரம்பராக்ரமத்திலே "ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:" என்கிற தநியனை யநுஸந்தித்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகர்த்தா விஷயத்தில் வேதாந்தாசார்யாபிப்ராயாநுகுணமாகவே வசநப்ரவசநங்களைப் பண்ணிக்கொண்டு இப்படி ஏககண்டராய்ப்போருவர்கள். வடகலையாரில் அஹோபில மடத்தாரும் தத்ஸம்பந்திகளும் தங்களுக்கு பஞ்ச ஸம்ஸ்காரப்ரதரான பெரியவாச்சாம்பிள்ளை முதலானோருளிச்செய்த மந்த்ரார்த்தவிஷய க்ரந்தங்களை யநாதரித்துந் தத்விருத்தங்களான ரஹஸ்யத்ரயஸாராதிக்ரந்தங்களை யாதரித்து அதிகரித்துக்கொண்டு ஸம்ப்ரதாயாதி லங்கநம் பண்ணுகிறார்களாகையாலே அதவர்களுக்கு மநுசிதம். முநித்ரயஸம்ப்ரதாயஸ்தருக்கும் பரகாலஜீயர் ஸம்ப்ரதாயஸ்தருக்கும் அஹோபிலமடத்திற் கதிபதியான ஷஷ்டபராங்குச ஸ்வாமியினுடைய ஸம்ப்ரதாயமுண்டாகையாலே ஷஷ்டபராங்குச ஸ்வாமிக்குப் பெரிய வாச்சாம்பிள்ளை ஸந்நிதியிலே பஞ்சஸம்ஸ்கார ஸம்ப்ரதாயமுண்டாகையாலே யவரினி யிரண்டு ஸம்ப்ரதாயஸ்தருக்கும் தத்சிஷ்ய ப்ரசிஷ்யர்களுக்கும் ஸ்வபரமாசார்யரான ஷஷ்டபராங்குச ஸ்வாமிக்குப் பரமாசார்யரான பெரியவாச்சான்பிள்ளை திருவடிகள்விஷயத்தில் அநாதரம்பண்ணுகை யநுசிதம். வேதாந்தாசார்யரருளிச்செய்த தாத்பர்யசந்த்ரிகை, மணிப்ரவாளமான ரஹஸ்யத்ரய விரோத பரிஹாரம், ஸ்ரீபாஞ்சாராத்ரரக்ஷை, இவைக ளாகாங்க்ஷிதாம்சங்களிலே யந்யோந்ய மேகவாக்கியங்களாய்க்கொண்டு நாதயாமுநயதிவர ஸம்ப்ரதாயவ்ருத்திகளாகிற கார்த்தயுகதர்ம்ம நிஷ்டாதிகாரிகளுக்கு பிஷ்டபசுயாக மல்லது ஸாக்ஷாத்பசுயாகங்கூடாதென்று வேதாந்தாசார்யருக் கபிமதமென்று ப்ரதிபாதியா நிற்கச்செய்தேயும்,அத்தை யதிலங்கித்து ப்ரத்யக்ஷபசுயாகம் பண்ணுகையும், இப்படி தத்விருத்தங்களுமாய் தம்மில் மிதோ விருத்தங்களுமான తద్విరుద్ధంగళుమాయ్ తమ్మిల్ మిథో విరుద్ధంగళుమాన தத்வாநுஷ்டாநங்களை ப்ரதிபாதித்துக் கொண்டு திவ்யதேசங்களைத் தநியனுக்காக க்ஷோபிதங்களாக்கிக்கொண்டு இப்படிஜகத்க்ஷோப பர்யவஸிதராகிறார். ஆகையாலவர்க ளெல்லார்க்கு மிது அத்யந்தமநுசிதம். இவ்வர்த்தம் நிரூபகமத்யஸ்த த்ருஷ்டியாக நிரூபித்துப் பார்க்குமளவில் ஸஹ்ருதய ஹ்ருதயாரூடமாம்.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் ஏகோநத்ரிம்ச

ப்ரச்நோத்தரம்.

அநந்தரம் திவ்யதேசங்களிலே பெருமாள்புறப்பாடுகண் டருளுகிறபோது திவ்யப்ரபந்தாநு ஸந்தாநம் முன்னும் வேதபாராயணம் பின்னுமாக நடந்துப் போருகைக்கு மூலமென்னென்கிற சரமப்ரச்நத்திற்குத்தரம் எங்ஙனேயென்றில்:— ఋగ్యజుస్సామాథర్వణ వేదంగళ్ ருக்யஜுஸ்ஸா மாதர்வண வேதங்கள் நாலுந் தனித்தனியே ஸ்வஸ்வமாத்ர பர்யவஸிதங்களாகையாலும் திவ்யப்ரபந்தம் சதுர்வேத ஸம்மிதமாகையாலும் இந்தப்ராதாந்யாப்ராதாந்

யங்களை யிட்டு சதுர்வேத ஸம்மிதங்களான ப்ரபந்தங்கள் முன்னும், சதுர்வேதங்களி லொன்ருன ருகாதிகள் பின்னும், அநுஸந்திக்கப் படுகிறது. இன்னமும் வேதம் பரத்வப்ரவண மாகையாலும் திவ்யப்ரபந்தம் அர்ச்சாவதார ப்ரவணமாகையாலும் இவற்றிற்கு ப்ரக்ருதோபயோகாநுபயோக ப்ரயுக்தவைலக்ஷண்ய நிபந்தனமாக திவ்யப்ரபந்தம் முன்னும் வேதம் பின்னுமாகிறது. இன்னமும் "ராஜவத்சோபசாராத்" என்கிறபடியே ராஜாக்களுக்கு போகாவலி பிருதாவலிகள் முன்னும் ஸ்வஸ்திவாசகம் பின்னும் ஆகிறப்போலே யிங்கு மர்ச்சாவதாரம் ராஜவதுபசரணீய மாகையாலே விருதாவலி ஸ்தாநீயங்களான திவ்ய ப்ரபந்தங்கள் முன்னும் ஸ்வஸ்திவாசக ஸ்தாநீயவேதபாராயணம் பின்னுமாயிருக்கும். இன்னமும் "సవితృమండలే బ్రహ్మా విష్ణుశ్శివస్సబ్రం హితాః । స్తువంతిమునయస్సార్ధం గంధర్వాగీతయక్షోరగః" என்று ஸூர்யனுக்கு முன்னே கானமும் பின்னே ஸ்துதியும் நடக்கிறப்போலே யிங்குங் கோடிஸூர்யஸமரான வர்ச்சாவதாரத் தெம்பெருமான்களுக்கு முன்னே திவ்யப்ரபந்தாநுஸந்தானமும் பின்னே பகவத்ஸ்துதிபரமான வேதபாராயணமும் நடக்கிறது. இன்னமு மிதற்கு மூலாந்தரமுங் கண்டுகொள்வது.

இதித்ரிம்சத் ப்ரச்நயாம் த்ரிம்ச

ப்ரச்நோத்தரம்.

இனி ப்ரகீர்ணம் சொல்லுகிறது. அதெங்ஙனே யென்றால்:- முதலாழ்வார் மூவருக்கும் அவதாரகல்யப்தஸங்க்யையில் ப்ரமாணம். "ఆజ్ఞాధీశ్రీచంద నేదాప్యపరాఖ్యే" என்று. இதில் "ఏకస్థానం దశస్థానం శతస్థానం సహస్రకం। అయుతం లక్షకశ్చేతి" என்கிற க்ரமத்திலே அகாராதி கடபயாதியைப்பற்றி ஆ=௨. க்ஞா=௮0. தீ=௬00. ர=௨000. ச=௬0000. ந்த=௮00000ஷு என்றபடி. திருமழிசைப்பிரான் அவதாரத்திற்குக் கலியுகஸங்க்யை="దాప్యపరాజ్ఞా నధారాష్టే" என்று. நம்மாழ்வார் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை "శ్రీవిజ్ఞానదీర్ఘోత్తరే" என்று குலசேகராழ்வார் திருநக்ஷத்ரத்திற்கு கல்யப்தஸங்க்யை "కల్యబ్దేసుఖసంఖ్యయావ్యపగతే" என்று. பெரியாழ்வார் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை "తత్త్వాభాపగమేకతా" என்று. தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை "దేహశ్రీశరకుత్తరే" என்று. திருப்பாணாழ்வார் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை "శ్రీవేలాబలినిగణేమేకలియుగే" என்று. திருமங்கையாழ்வார் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை" సుధాగానాభ్యానాం కలియుగభవానామపగమే" என்று. ஆண்டாள் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை "సిద్ధానాంశరదాం కలావపగమే" என்று. உடையவர் திருவவதாரத்திற்கு சகாப்தஸங்க்யை. "ధీలబ్ధా" என்று. திருநாட்டிற் கெழுந்தருளியதற்கு சகாப்தஸங்க்யை "ధర్మోనష్టః" என்று. வே

தாந்தாசார்யருடைய வவதாரத்திற்கு சகாப்தஸங்க்யை- "[illegible]" என்று. திருநாட்டிற் கெழுந்தருளினதற்கு சகாப்தஸங்யை "[illegible]" என்று. மணவாளமாமுநிகள் திருவவதாரத்திற்கு கல்யப்தஸங்க்யை= "[illegible]" என்று. சகாப்தஸங்க்யை "[illegible]" என்று. திருநாட்டிற் கெழுந்தருளின சகாப்தஸங்க்யை "[illegible]" என்று. சகாப்தத்தில் ௧௧௯௨ - வதான விபவவர்ஷத்தில் வேதாந்தாசார்யருடைய திருவவதாரம். அதற்கு நாற்பத்தைந்தாவதான பரீதாபிஸம்வத்ஸரத்திலே பன்னீராயிரம் திருமுடிதேச விப்லவம் வந்தது. அப்போது நம்பெருமாள் கோயிலைவிட்டு வலசை யெழுந்தருள, வ்ருத்தரா யெழுந்தருளியிருந்த பிள்ளை லோகாசார்யர் ப்ரேமபரவசராய்க் கொண்டு பெருமாளுக்குத் திருக்காவலாகக் கூடவெழுந்தருளினார். இப்படி பிள்ளை லோகாசார்யர் வேதாந்தாசார்யரில் காட்டில் ஜ்ஞானதோஜந் மதச்ச ச்ரேஷ்டராகையாலே கூரம்பிள்ளை வேதாந்தமென்று வேதாந்தாசார்யருக்கு முன்னே பிள்ளை லோகாசார்யருக்கு பெரியபெருமாள் அருளப்பாடு ஸாதித்துக் கொண்டுவருகிறார். ஆகையாலே சங்காந்தரத்திற் கவகாசமில்லை. லோகாசார்யர், ச்ரீஸூக்தியை ச்லாகித்ததுண்டாகில் குணநிபந்தனமாயித்தனே. பரீதாபிவருஷத்திற் கைந்தாவதான நளவருஷத்திலே வேதாந்தாசார்யருடைய வவதாரம். அதற்கைம்பத்தி ஞலாவதான ஸௌம்யவருஷத்திலே வேதாந்தாசார்யர்திருநாட்டிற்கெழுந்தருளினார். ஸாதாரணவர்ஷம் மணவாளமாமுநிகள் திருவவதாரம். விரோதிக்ருத்வர்ஷத்தில் நம்பெருமாள் மீளவுங் கோயிலுக் கெழுந்தருளினார். ஆக பரீதாபிவருஷம் முதல் விரோதிக்ருத்வருஷத்தளவும் அருபதுவர்ஷம் வலசைசெய்ய, அந்தவிரோதிக்ருத் வருஷத்திற்கு நாற்பத்திமூன்றாவதான ஜயவர்ஷத்திலே நயினாசார்யர் திருநாட்டிற் கெழுந்தருளினார். அந்த ஜயாக்யவருஷத்திற்கு முப்பத்தோராவதான ருத்ரோத்காரிவருஷத்திலே மணவாளமாமுனிகள் திருநாட்டிற் கெழுந்தருளினார். இது அவதாரதீர்த்தவருஷாதிக ளிருக்கும்படி. இன்னமும் மணவாளமாமுநிகள் வண்டுவராபதி மன்னனென்கிற மந்த்ரலிங்கமடியாக தக்ஷிணத்வாரகாதீசரான மன்னனுருக்குமாசறுசோதியென்கிறதிருவாய்மொழியை நித்யாநுஸந்தேயமாக ஸமர்ப்பித்தார். மணவாளமாமுநிகளுக்கநந்தரம் அவர் திருப்பேரனாரானஜீயர் நயினார் திருநகரியில் திருக்கோபுரங்களையும் ப்ராகாரங்களையும் பெரியஜீயர்நாளையில் குறையிருந்ததைத் தலைக்கட்டினார். ஆழ்வார் விஷயமான நக்ஷத்ரமாலிகையென்கிற சப்தார்த்தோ பயசித்ர ப்ரபந்தத்தை யருளிச்செய்தார்.

நம்பெருமாள் தம்முடைய ஸந்நிதிவாசல்படியைப்பிடித்துக்கொண்டு உள்ளே யிருந்துகொண்டு நம்பிள்ளை திருவோலக்கத்தைக் கடாட்சித்துக் கொண்டு பிள்ளையுபந்யாஸத்தைத் திருச்செவிசாற்றி யருளாநிற்க, திருவிளக்குப் பிச்சனென்கிறவன் "இப்படி கலியிலே அர்ச்சாவதாரஸமாதியைக் குலைத்துக்கொள்ளக்கடவீரோ" வென்று அடர்த்து வார்த்தைசொல்ல, ஆகிலுள்ளே போகிறேனென்று பூபாலராயனிலே யெழுந்தருளுவராம். இப்படியிறே

நம்பெருமாள் பிள்ளையுபந்யாஸத்திலே செவிசாய்ந்திருப்பது? பட்டருக்கு உடையவர் வேதாந்தசார்ய பதத்தையும் ஸ்ரீஸூக்தி ஸிம்மாஸனத்தையும் ஸாதித்தருளி நம்மைப்போலே இவரை ப்ரதிபத்தி பண்ணுங்கோளென் றருளிச் செய்கையாலே கிடாம்பியாச்சான் முதலானாரும் பட்டரை யநுவர்த்தித்துக்கொண்டு போந்தார்கள். உடையவர் திருவெள்ளறை யெம்பெருமான் விஷயமாக ஒருச்லோகமும் ஆழ்வார்விஷயமாக ஒருச்லோகமும் ஆண்டாள் விஷயமாக ஒருச்லோகமும் முக்தகமாக வருளிச்செய்தார். இன்னமும் இங்ஙனே கண்டுகொள்வது. மணவாளமாமுநிகள் அவ்வோ திவ்யதேசங்களி லெம்பெருமான்களை மங்களாசாஸனம் பண்ணும்போது முக்தகங்களாகப் பாட்டுக்களைப் பலவு மருளிச்செய்தார். விசேஷித்து திவ்ய ப்ரபந்தவிஷயமாக ,,విద్యన్తేహిపరాశరాదిమునిభిః ప్రోక్తాః ప్రబంధాః పురాభక్తా ఏవహితే తథాపిసకలం త్యక్త్వాపరంగేశ్వరః భక్తానేవపరాంకుశాదిపురుషాంస్తత్ప్రబంధాంశ్చతా నత్యాదృత్య సదోపలాశయమియం తజ్జ్ఞాన సంతత్యైయె" என்று ஸர்வஜ்ஞங்களுக்கும் திவ்யப்ரபந்த ப்ரமாண ப்ரத்யயம்வரும்படி யருளிச்செய்தார். ஏவம் பூதரான மணவாளமாமுநிகள் விஷயமான ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தநியனை விரோதிக்கவேணுமென்று சில அத்யந்தார்வாசீநர் திருமலையிலேபோய் அவிடத்தில் அதிகாரியாயிருக்கிறவன் தம்முடையவனென்று அவன்முகத்தாலும் அர்த்த ப்ரதாநமுகத்தாலும் அர்ச்சகனை யநுகூலிப்பித்துக்கொண்டு அநாதிகாலமாகத்திருவாராதநோப க்ரமத்திலே "துடங்கண்டி ஸ்ரீசைலேசதயாபாத்ர"மென்று பெரியஜீயர் முதலானாருக்கு அருளப்பாடிமெத்தைத்தவிர்த்துராமாநுஜதயாபாத்ரமென்று அர்ச்சகனைச்சொல்லும்படி கற்பித்துவைக்க, வவனு மத்தை யங்கீகரித்துக்கொண்டிருக்க, பெரிய திருவோலக்கமாய் வடகலையாரும் ராஜ்ஜியருமாய்த் திரண்டிருக்கிற வளவிலே திருவாராதநோ பக்ரமத்திலே யந்தவர்ச்சகன் பரவச ஹ்ருதயனாய் அத்தை மறந்துப்பழையபடியே தானே "துடங்கண்டி ஸ்ரீசைலேசதயாபாத்ர" மென் றருளப்பாடிட, வவர்கள் பக்நோத்ஸாஹராய்நம்முடைய யத்நம் பெருமாளுக்குத்திருவுள்ளமில்லையென்று ஸ்வயமேவ நிவ்ருத்தரானார்களென்று ப்ரஸித்தம். மற்றொருகாலத்திலே யொரு வடகலைஜீயர் அதிகாரிபலத்தாலே பெருமாள் புறப்பாட்டிலே இயல் துடக்கத்திலே ராமாநுஜதயாபாத்ரத்தைச் சொல்லுவதாக வுருப்பட்டு எல்லாரும் திரண்டிருக்கிறவளவிலே வாத்யவாஹமான அநட்வாஹமான து ஜீயர் மேலேபாய்ந்துவிழ,வெல்லாருங் கூட்டங்கலைந்து பெருமாளுக்குத் திருவுள்ளமில்லையென்று நிவ்ருத்தரானார்களென்று ப்ரஸித்தமிறே. இன்னமும், ஏதத்தேசாதிபத்யம் பண்ணிக்கொண்டிருப்பா னொருதுஷ்டனுடைய ராஜத்வாரத்திலே இஞ்சி நதிக்ருதனாய் வடகலையாருடைய சிஷ்யனுமான ஒரு

கோலகொண்ட வ்யாபாரி வைஷ்ணவன், தன்னுடைய ராஜகுலபலத்தாலே பெருமாள்கோயிலிலே ராமாநுஜதயாபாத்ரத் தநியனை யநுஸந்திப்பிக்க வேணுமென்று நினைத்து, ராஜபடையிட்டு தென்னாசார்யர்களை பெருமாள்கோயிலி னின்றும் ராயவேலூருக்கு வருவித்து இவர்களைக்கொண்டு அதற்குக்கை போலெ செய்விப்பதாக நிர்ப்பந்திக்க, விவர்கள் அதுக்கிசையாமலிருக்க, இவர்களை யாட்வொணியனுடைய வங்காடியிலே வளைத்துவைக்க,விவர்கள்மிகவும் க்லிஷ்டராய்ப் பேரருளாளனை நினைத்து, "முற்காலத்திலே திருமங்கையாழ்வார் நடுவழியிலே ச்ராந்தராக வவரை விச்ரமிப்பித்து வேண்டுந்தநங்களை நிக்ஷேப மெடுத்துக்கொடுத்துக் கடாட்சித்தருளி, இப்படி யாழ்வாரை யுபசரித்தும், பின்பு உடையவருக்கு உத்தமாச்ரமத்தையும் ஆறுவார்த்தையையும் ஸாதித்தருளி, ஸ்ரீபாஷ்யத்திற்கு மூலகந்தமாய் நின்றும்,அதற்குப் பின்பு நடாதூர்பெரியவம்மாள் முதலாக ச்ருதப்ரகாசிகையை யவதரிப்பித்தும், பின்னையும் நம்பிள்ளைமுதல் ஓரான்வழியாய்வந்து முப்பத்தாறுயிரப்படியை பகுமுகமாக ப்ரவர்த்திப்பிக்கும்படி திருவடியூன்றிய தேவப்பெருமாளுக்காக ததாசார்யரான பத்மநாபரை நியமித்து உபகரித்தும், பின்பு மணல்பாக்கத்து நம்பியார் முகமாக பிள்ளை லோகாசார்யரை நியமித்து ஸ்ரீவசநபூஷணத்தை யவதரிப்பித்தும்,இப்படி யிந்ததர்சநத்திற்கு ஆமூலசூடம்வேர்ப்பற்றான தேவரீர் இப்போதிந்த காலுஷ்யத்தையுண்டாக்கி இத்தர்சநத்தைத் தடுக்கிறீரோ"வென்று வெறுத்துக்கொண்டிருக்க,வற்றைராத்ரியிலே யந்தவ்யாபாரி வைஷ்ணவனுக்கு ஆலம்பநமான ஒருதுலுஷ்கனை யந்தராஜத்வாரத்திலே மற்றுமம்அதிக்ருதரானவர்கள் கார்யப்பாட்டாலே சூலதண்டமாக வதித்தார்களாய் அதப்போதே யிவர்களுக்குத் தெறிந்து மிகவும் ஸந்துஷ்டராய்பேரருளாளருடைய துயரறுசுடரடியை மிகவும் புகழ்ந்துகொண்டு பொழுது விடிந்தவாறே தத்ரத்யராலே ஸத்க்ருதராய்க் கொண்டு பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி பேரருளாளரை ஸேவித்து அன்றுமுதல் நிருபத்ரவமாய்க்கொண்டு பெருமாள் கோயிலிலும் அவற்றைச்சேர்ந்த ஆழ்வார்கள் ஸந்நிதிகளிலும் ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தநியனை நடத்திக்கொண்டு போந்தார்கள் என்று ப்ரஸித்தம். மற்றுமிந்த ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தநியன் விஷயமாக த்ரோஹத்தை நினைத்த இடங்கள் பகவந்நிக்ரஹமாகிற தாவாக்நியிலே தீஞ்சுபோனவை பலவுமுண்டு. இதி லநுகூலித்தவர்கள் ஐஹிகாமுஷ்மிகங்களிலே குறைவற்று வாழ்ந்துபோனவர்கள் அநந்தமாயிருப்பார்கள். இந்தத் தநியனை நம்பெருமாளுடைய வபிப்ராயத்தாலே வாநமாமலைஜீயர் ஆத்யபாதத்தையும் பட்டர்பிரான் ஜீயர் த்விதீயபாதத்தையும் கோயில்க்கந்தாடையண்ணன் உத்தரார்த்தத்தையும் மௌநிச்லோகந்யாயத்தாலே மாநஸமாகரசித்துக்கொண்டு நாளைக்கு சாற்

றுமுறையிலே பெரிய திருவோலக்கத்திலே நம்பெருமாள் திருமுன்பே ப்ர காசமாக பெரியஜீயருக்கு ஸமர்ப்பிப்பாராகவிருக்க, அத்தை மற்றைநாள் சாற்றுமுறையிலே திருவோலக்கத்திலேநம்பெருமாள் ஒரு பாலரூபேணவிந்த த்தநியனை யெல்லாரும் ச்ரம்விக்கும்படி யருளிச்செய்து, அந்தர்த்தாநகதரா ஞர். இப்படி ப்ரதம ப்ரதிஸந்தானத்தையிட்டு இந்தத் தநியனை மூவரருளிச் செய்தாரென்றவுமாம். ஸர்வலோகச்ராவ்யமாம்படி நம்பெருமாள் பாலரூபே ண ப்ரதமோச்சாரணம் பண்ணுகையாலே நம்பெருமா ளருளிச்செய்தாரென் றவுமாய்த்து. இத்தை இதற்கு பஞநாள்முன்னே பதரிகாச்ரமத்திலே அயோ த்யை ராமாநுஜய்யங்காருக்கு ஸ்வப்நமுகேந பதரிநாராயண னுபதேசிக்கை யாலே யித்தை பதரிநாராயண னருளிச்செய்தாரென்றவுமாயிருக்கும். ஆகை யா லிந்தத்தநியனுக்குத் தத்தத்க்ரந்தங்களிலே கர்த்ரு நிர்தேசபேதமும் ஸம்ப்ரதியந்நம்.

இதிஸ்ரீவதூலாகுலதிலக ஸ்ரீவீரராகவகுருவிரசிதம
த்ரிம்சத்ப்ரச்நோத்தரம்
ஸமாப்தம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வாதூல வீரராகவ குரவேநம:

ஆசார்யன் திருவடிகளேசரணம்.